# வருடாந்த அறிக்கை

# 2012

## இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

**உள்ளடக்கம்**


**பக்கம்**

- சபையின் ஸ்தாபிதமும் அமைப்பும் தொலைநோக்கும் குறிக்கோளும் 03
- அதிகார சபையின் நோக்கங்களும் அதிகாரங்களும் கடமைகளும் 3-5
- கட்:டுபாட்டு பிரதேசம் , பணிப்பாளர் சபை மற்றும் நிர்வாக அமைப்பு 6-9
- தலைவர், பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 10-16
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுத் தலைவரின் அறிக்கை 17-20
- 2012 ஆம் ஆண்டின் அபிவிருத்தித் திட்டங்களின் நிலைமை 21-48
- கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 49-61
- 2012.12.31 ஆம் திகதியில் நிதி நிலைமை அறிக்கை 62-63
- 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச்செயற்பாடு பற்றிய அறிக்கை 64
- 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய அறிக்கை 65-66
- 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டிய காசுப் பாய்ச்சல் அறிக்கை 67-68
- கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் பற்றிய குறிப்புக்கள் 69-77
- கணக்குகள் பற்றிய குறிப்புகள் 78-85
- நிதி அறிக்கைகளுக்கான அட்டவணைகள் 86-92
- நிதி மீளாய்வு 2006 - 2012 93-99

# இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

**வருடாந்த அறிக்கை 2012**

**அதிகார சபையின் ஸ்தாபிதம்**

தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை பாராளுமன்றத்தின் 1996 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு அரசாங்க அதிகார சபையாகும்.

**தொலைநோக்கும் இலக்கும்**

**தொலைநோக்கு**

துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்திற்கு நுழைவாயிலாக அமையும் அதேசமயத்தில், கவர்ச்சிகரமான, சவால் விடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை, இளைஞர்களுக்கு உருவாக்கி, புவியியல் ரீதியில், நிலைபேறான கலாசார அடிப்படையில், அதிசயிக்கத்தக்க சூழலை உள்ளடக்கிய, பொருளாதார சுபீட்சம் கொண்ட, தென் பிராந்தியத்தை உருவாக்குவதே எமது தொலைநோக்காகும்.

**இலக்கு**

தனியார்துறையினரதும், உப அமைப்புக்களினதும் ஒத்துழைப்புடன், பிராந்திய மக்களுக்கு அவசியமான தேவைகள், பிராந்தியத்தின் மூலவளங்கள் என்பனவற்றை கடும் பரிசோதனையின் அடிப்படையில் இனம் காண்பதன் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரத்தையும், சவாலாக அமைந்துள்ள சந்தர்ப்பங்களையும் வழங்கும் சூழலுக்கு உட்பட்ட வகையில் இலக்குத் தீர்மானிக்கப்பட்ட தனி நபர் வருமானத்தை அடைவதும், பிராந்தியத்தின் மொத்த பொருளாதார உற்பத்தியின் துரித வளர்ச்சிக்குப் பங்களிப்பை வழங்குவதுமே எமது இலக்காகும்.

**தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களும் அதிகாரங்களும் கடமைகளும்**

சட்டத்தின் 12ஆம், 13ஆம் பிரிவுகளின் கீழான நோக்கங்கள், அதிகாரங்கள், கடமைகள் என்பனவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

**(சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம்) அதிகார சபையின் நோக்கங்கள்:**

(அ) குறிக்கப்பட்ட பிரதேசத்தில் உற்பத்தியை அதிகரிக்கவும், பொருளாதார அபிவிருத்திக்கு உதவவும், வருமானம் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவுமென அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைக்கிடுதல்.

(ஆ) குறிக்கப்பட்ட பிரதேசத்தின் மொத்த அபிவிருத்தித் திட்டத்தின் இனம் காணப்பட்ட செயற்திட்டங்கள் பற்றி முன்னுரிமை அடிப்படையில் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

(இ) குறிப்பிட்ட திட்டங்கள் மற்றும் செயல்திட்டங்களுக்கென வெளிநாட்டு உதவி கோருமாறு சம்பந்தப்பட்ட அமைச்சின் அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்தல்.

(ஈ) பந்தி (ஆ) யில் தெரிவிக்கப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதில் அரசாங்கத் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்;ராட்சி சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றினதும், தனியார் மற்றும் அரசாங்கப் பிரமுகர்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளலும், குறிக்கப்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிடுதலும்.

(உ) பந்தி (ஆ) யில் தெரிவிக்கப்பட்ட விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதிலும், குறிக்கப்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிடுவதிலும் வெளிநாட்டு மற்றும் உள்ளூ தனியார்துறை நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்.

**அதிகார சபையின் அதிகாரங்கள், கடமைகள், செயற்பாடுகள் (சட்டத்தின் 13 ஆவது பிரிவின் பிரகாரம்)**

(அ) அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் உளளுர் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்களிடம் இருந்து தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

(ஆ) குறிப்பிட்ட பிரதேசத்தில் விசேட அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளவும், அவற்றை நடைமுறைக்கிடவுமென உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அனுசரணையைப் பெற்றுக்கொள்ளல்.

(இ) குறிப்பிட்ட பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைக்கிடப்படுவதற்கு பொறுப்பான அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஏனைய நிறுவனங்கள் என்பன அவற்றைத் திட்டமிட்டு நடைமுறைக்கிடுவதில் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளல்.

(ஈ) அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்ட எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் பொறுப்பேற்று, பராமரித்துச் செயற்படுத்தும்படி அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஏனைய நிறுவனங்களைக் கோருதல்.

(ஈ) அதிகார சபையின் கடமைகளை நிறைவேற்றுவதில் உருவாகும் எந்தவொரு பொறுப்பையும் நிறைவேற்றவென சொந்தத் திணைக்களங்களை அல்லது நிறுவனங்களை உருவாக்குதல்.

(உ) குறிப்பிட்ட பிரதேசத்தின் பொருளாதார, சமூக அபிவிருத்தி சம்பந்தமாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

(ஊ) குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்படவிருக்கும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமாகவும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல்.

(எ) அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிடுவதற்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் பெறுவதற்குரிய கேள்விப்பத்திரங்கள் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் அரசாங்கம் வெளியிட்ட கேள்விப்பத்திர வழிமுறைகளுக்கு அமைய அவற்றை வழங்குதல்.

(ஏ) குறிப்பிட்ட பிரதேசத்தினுள் அதிகார சபையினால் வழங்கப்படும் சேவைக்கு கட்டணம் விதித்தல்.

(ஐ) எந்தவொரு அபிவிருத்தி திட்டத்தையும் நடைமுறைக்கிடுவதற்குத் தேவையான எத்தகைய அலுவலகத்தையும், இயந்திரங்களையும், உபகரணங்களையும் வேறு எந்தப் பொருளையும் கொள்வனவு செய்தல், சுவீகரித்தல், நிர்மாணித்தல், பராமரித்தல், புனரமைத்தல், தகுதியாக்கல்.

(ஒ) அரச அல்லது தனியார் நிறுவனத்தின் மூலம் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிடுதலும் அல்லது அவற்றுடன் இணைந்து நடைமுறைக்கிடுதலும்.

(ஓ) நிதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் நாட்டின் வளங்களிலிருந்து கடனைப் பெறுதல், நிதி திரட்டுதல், கடப்பாடுகளை நிலைநாட்டுதல்.

(ஔ) அசையாத சொத்து எதனையும் எவ்வகையிலாவது சுவீகரித்து வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுதல், ஈடு வைத்தல், விற்பதற்கு அல்லது வேறு எந்த வகையிலும் விற்பனை செய்வதற்கு உறுதிகூறுதல்.

(க) அரசியல் யாப்பு அல்லது வேறு எந்தவிதமான எழுத்துமூல சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் அல்லது சட்டத்தின் கீழான அதிகாரங்களை உபயோகித்து, அதிகார சபையின் இந்தச் சட்டத்தின் கீழான நோக்கங்களை அடைவதற்கென தேவையான தற்செயலான மற்றும் நிருவாக ரீதியிலான ஏனைய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

**பணிப்பாளர் சபை, பொது நிர்வாகம், சிரேஷ்ட முகாமைத்துவம் என்பனவற்றின் ஆணைக்குட்பட்ட பிரதேசங்கள்**

**குறித்துரைக்கப்பட்ட பிரதேசங்கள்**

சட்டத்தின் 3(1)ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் குறித்துரைக்கப்பட்ட பிரதேசம் என்பது காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகல மாவட்டங்களையும், இரத்தினபுரி மாவட்டத்தின் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளான கொலன்ன மற்றும் எம்பிலிப்பிட்டிய என்பனவற்றையும் உள்ளடக்கியதாகும். இதற்கமைய தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் குறித்துரைக்கப்பட்ட பிரதேசத்தில் 60 பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ள.

**அதிகார சபையின் பணிப்பாளர் சபை**

சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கமைய, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கீழ்க்காணும் 07 அங்கத்தவர்களை அதிகார சபை கொண்டிருக்கும்

**ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட பின்வரும் அங்கத்தவர்களை சபையின் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.**

(அ) அமைச்சின் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அமைச்சின் அதிகாரியொருவர்

(ஆ) நிதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அமைச்சின் அதிகாரியொருவர்

(இ) நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்' என கீழே விபரிக்கப்பட்ட ஏனைய 05 அங்கத்தவர்கள்

**அதிகார சபை ஒழுங்கமைக்கப்பட்ட அமைச்சு**

| | |
|---|---|
| அமைச்சு | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு |
| **சபையின் கடமைகளை வகிக்கும் அமைச்சர்கள்** | |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் | கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள் |
| பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் | கௌரவ லகஷ்மன் யாப்பா அபேவர்தன<br>கௌரவ முத்து சிவலிங்கம் |
| செயலாளர் | கலாநிதி பி.பி.ஜயசுந்தர அவர்கள் |

**பணிப்பாளர் சபை, பொது நிர்வாகம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் பணிப்பாளர் சபை**

**2012 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்**

தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் நான்காம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபை சம்பிரதாய முறைப்படி ஒவ்வொரு மாதத்திலும் ஒரு கூட்டத்தை நடத்தும். இருந்த போதிலும், நடைமுறை ரீதியிலான காரணங்களின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டில் 07 தடவைகள் மாத்திரமே சபை கூடியுள்ளது. இந்தக் கூட்டங்களுக்கு அதிகார சபையின் தலைவர் தலைமை வகித்துள்ளார். 2012 ஆம் ஆண்டில் பதவிகளை வகித்த சபை அங்கத்தவர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

01. திரு. ஏ.பி.எஸ்.ரஞ்சித் குணசேகர - சட்டத்தரணி — தலைவர்/பணிப்பாளர் நாயகம்
(2006.06.07 - 2012.12.31 வரை)

02. திரு.சுனில் சூரிய பண்டார திசாநாயக்க — அங்கத்தவர்
(2007.09.01 - 2012.12.31 வரை)
சிரேஷ்ட தேயிலைப் பரிசோதகர்
சிறிய தேயிலைத்தோட்ட அபிவிருத்தி அதிகார சபை

04. திரு.சரத் அமரவீர — அங்கத்தவர்
(2010.05.12 - 2012.12.31 வரை)

05. திரு. சந்தரன பிரியலால் பத்திரண — அங்கத்தவர்
(2010.05.12 - 2012.12.31 வரை)

06. திரு. டீ.சி.சிரிபத்தன — அங்கத்தவர்
(2011.04.08 - 2012.06.05 வரை)
பணிப்பாளர் - அரச வர்த்தக திணைக்களம், மத்திய
திறைசேரி, நிதியமைச்சின் பிரதிநிதி

07. திருமதி ட்பளிவ்.கே.கே. அதுகோரள — அங்கத்தவர்
(2012.06.20 - 2012.12.31 வரை)

08. திரு. கே. பீ. தஹனாயக்க — அங்கத்தவர்
(2012.06.20 - 2012.12.31)

09. திரு. ஏ.கே.ஏ.வை. தரங்க — அங்கத்தவர்
(2012.06.25 - 1012.12.31)

**அதிகார சபையின் பிரதான அலுவலக முகாமைத்துவம்**

| | |
|---|---|
| திரு. ஏ.பி.எஸ்.ரஞ்சித் குணசேகர (சட்டத்தரணி) | தலைவர்,பணிப்பாளர் நாயகம் |
| திரு. ஜே.கே.பத்மசிரி | பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) |
| திரு. டபிள்யூ.ஜீ.பீ.எல்.விஜயரத்ன | பணிப்பாளர் (திட்ட அமுலாக்கம் மற்றும் மேற்பார்வை) (2011.09.07- 2012.1.4 வரை) |
| திரு. பீ.என்.விஜேரத்ன | பதில் பணிப்பாளர் (திட்ட அமுலாக்கம்) (2011.09.07 - 2012.01.04 வரை) |
| திரு. பீ.என்.விஜேரத்ன | பதில் பணிப்பாளர் (கொள்கைத் திட்டமிடல்) (2011.09.07 - 2012.01.04 வரை) |
| திரு. சுனில் வன்னிகம | துறை முகாமையாளர் (கைத்தொழில்) |
| திரு. எல்.எம்.ஏ.பெரேரா | துறை முகாமையாளர் (திட்டமிடல்) |
| திரு. எச்.கே.ரணவீர | துறை முகாமையாளர் (மீன்பிடி) |
| திருமதி எஸ்.டி.கல்யாணி | துறை முகாமையாளர் (காணிகள்) |
| திரு. ஸ்ரியந்த லியனாராச்சி | துறை முகாமையாளர் (பயிற்சி) |
| திரு. எஸ்.ஆர்.விஜேசேகர | துறை முகாமையாளர் (அடிப்படை வசதிகள்) |
| திரு. சீ.எல்.வேகிரிய | துறை முகாமையாளர் (பெருந்தோட்டம்) (2010.10.15 – 2011.12.31 வரை) |
| திரு. டபிள்யூ.எம்.ஏ.பெரேரா | துறை முகாமையாளர் (விவசாயம்) (2010.10.15 – 2011.12.31 வரை) |
| திரு.எஸ்.சீ.வனிகதுங்க | உள்ளகக் கணக்காய்வாளர் |

**அதிகார சபையின் மாவட்ட நிர்வாகம்**

| | | |
|---|---|---|
| திரு. கே.ஐ.மாசகோரள | மாவம்ட பணிப்பாளர் | காலி மவட்டம் |
| திரு. ரஞ்ஜித் டி சில்வா | மவாட்ட பணிப்பாளர் | மாத்தறை மாவட்டம் |
| திரு. கே.குணதிலக (2010.08.31 - 2012.03.15) | மாவட்டப் பணிப்பாளர் (பதில்) | ஹம்பாந்தோட்டை மாவட்டம் |
| திரு. றொஹான் சஞ்சீயவ | பதில் மாவட்ட பணிப்பாளர் | ஹம்பந்தொட்டை மாவட்டம் |
| திரு. பீ.எம்.குலதுங்க | பதில் மாவட்டப் பணிப்பாளர் | மொனராகலை மாவட்டம் |

**அதிகார சபையின் ஊழியர்கள்**

| | |
|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 03 |
| மூன்றாம் தரம் | 89 |
| இரண்டாம் தரம் | 91 |
| அடிப்படை மட்டம் | 78 |
| **மொத்தம்** | **261** |

## அறிமுகம்

1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 16 ஆண்டுகளை 2012 ஆம் ஆண்டில் நிறைவு செய்யும் தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை அதன் சட்டரீதியான தேவைக்கிணங்க, சகலவித நடவடிக்கைகள் பற்றிய மீளாய்வைச் சமர்ப்பிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மீளாய்வின் மூலம் சபையின் ஆரம்பம் முதல் இதுவரை எனது செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டின் திட்டங்களைச் செயற்படுத்துவதன் முன்னேற்றம் சபையின் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளும் தற்போதைய நிலைமைகளும் மற்றும் 2012 ஆம் ஆண்டில் சபையின் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது கடந்து வந்த விசேட நிகழ்வுகளையும் அதி விசேடத் தன்மையும் தெளிவுபடுத்த எதிர்பார்க்கின்றேன்.

## 1996 வருடத்தில் இருந்து 2011 ஆண்டு வரை செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம்.

தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை 1996 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டது. இந்த அதிகார சபை அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கம், உற்பத்தியைத் தரமுயர்த்துதல், பொருளாதார அபிவிருத்தியை மேம்படச் செய்தல், தென் பிராந்தியத்தின் வருமானத்தையும், வேலைவாய்ப்புக்களையும் அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுதல் என்பனவாகும். இத்தகைய நோக்கங்களை அடைவதற்கென அதிகார சபை ஆரம்பத்தில் இருந்து பலதரப்பட்ட அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து செயலாற்றி வந்துள்ளது.

இதற்கமைய ருஹுணுபுர அபிவிருத்திக்கு அதிகார சபை முக்கியத்துவமளித்து, தென் பிராந்தியத்தின் அபிவிருத்திக்குத் தேவையான பாரிய அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துள்ளது. ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம், தென் பிராந்திய நெடுஞ்சாலை, தென் பகுதிக்கான போக்குவரத்து அமைப்பு, தெற்கு சர்வதேச விமான நிலைய நிர்மாணம், மாத்தறை - கதிர்காம ரயில் பாதை என்பன இவற்றுள் சிலவாகும்.

இவற்றிற்கு மேலதிகமாக, மேற்பார்வை அமைச்சுக்களின் பணிப்பின் பிரகாரம் பிராந்திய அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட சிறிய, நடுத்தர அளவிலான அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அதிகார சபை கவனம் செலுத்தி இவற்றை அமைப்பதற்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம், தென் பிராந்தியத்தில் உள்ள மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கவனத்தைப் பெற்றுள்ளது. இவற்றுள் மிதிகமவில் லோட்ஸ்டார் டயர் தொழிற்சாலை (1996), எம்பிலிப்பிட்டியவில் தொழில் திறன் நிலையம் (1997), மாத்தறையில் ஒலியகொடவத்தை அனல் மின் உற்பத்தி நிலையம் (1998), மாத்தறையில் மாத்தறை கும்பல்கமவில் இசுறு பீங்கான் தொழிற்சாலை (1999), கம்புறுப்பிட்டியவில் ரட்டலங்காவத்த ஓட்டோ லங்கா டயர் தொழிற்சாலை (2001), மாத்தறை கம்புறுப்பிட்டியவில் ரட்டலங்காவத்த ட்ரகன் பழமரத் தோட்டத் திட்டம் (2009) போன்ற வெற்றிகரமான திட்டங்கள் முக்கியமானவையாகும். இத்தகைய திட்டங்களின் மூலம் வெளிநாட்டு நாணயமாற்றுக்களை பெருமளவில் நாம் பெற்றுக்கொண்டது எமக்குக் கிடைத்த வெற்றியாகும்.

அத்துடன், பல வருடங்களாக செயலிழந்திருந்த தேயிலைத் தொழிற்சாலைகளை மீளமைத்து, தென் பிராந்தியத்தின் தேயிலைப் பொருளாதாரத்திற்கு மாபெரும் சேவையாற்றவும் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் முடிந்துள்ளது. இவற்றில் தனியார் மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட காலி, பனில்கந்த தேயிலைத் தொழிற்சாலை - 1999, மாத்தறை அக்குரஸ்ஸயில் கலகாவ தொழிற்சாலை - 2001, காலி தவளமவில் ஜெஸ்மின்வெலி தேயிலைத் தொழிற்சாலை - 2001 மற்றும் 2009 இல் ஆரம்பிக்கப்பட்ட ஹந்துகல - வலஸ்முல்லயில் தேயிலைத் தொழிற்சாலை என்பன இவற்றுள் சிலவாகும்.

இத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, 1998 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதியில் கிராமப்புறப் பொருளாதாரத்தைத் தரமுயர்த்தவென சில திட்டங்களை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைக்கிட்டுள்ளது. கிராமப்புற மக்களின் தேவைகளும், பொருளாதார சமூகப் பிரச்சினைகளும் இனங்காணப்பட்டதை அடுத்து, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில், தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை கைத்தொழில், பெருந்தோட்டம், கடற்றொழில், விவசாயம், கால்நடை வளர்ப்பு, காணி, பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய துறைகளில் உள்ள பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்கிட்டுள்ளது. பின்தங்கிய கிராமங்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் கிராமப்புறப் பொருளாதாரம் அபிவிருத்தியடைவதற்கு அதிகார சபை மேலும் உதவி வழங்கியுள்ளது. இதனையடுத்து, மஹிந்த சிந்தனை தேசியத் திட்டத்திற்கு உட்பட்ட வகையில் 2007 ஆம் ஆண்டில் இருந்து தேசிய மட்டத்திலான தேவைகளைக் கருத்திற்கொண்டு ஜாதிகசவிய, கமநெகும திட்டத்தின் கீழ் காலி (18), மாத்தறை (12), ஹம்பாந்தோட்டை (17) மாவட்டங்களில் உள்ள 47 கிராமங்களில் அதிகார சபை அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

2008 ஆம் ஆண்டில் **ஜாதிகசவிய, கமநெகும அபிவிருத்தித் திட்டம்** , தெற்கு பிரதேசத்தில் காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை, மொனராகல மாவட்டத்தையும், இரத்தினபுரி மாவட்டத்தில் கொலன்ன மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு மேலதிகமாக இவை உள்ளடக்கப்பட்டன. புதிய 103 கிராமங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடும் இந்த அதிகார சபைக்கு வழங்கப்பட்டது. மொத்தமாக தென் பிராந்தியத்தில் 150 கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு 2010 ஆம் ஆண்டு எமக்கு வழங்கப்பட்டது. (காலி மாவட்டம் - 43, மாத்தறை மாவட்டம் - 45, ஹம்பாந்தோட்டை மாவட்டம் - 37, மொனராகலை மாவட்டம் 25).

இத்தகைய திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையிலும் **ஜாதிகசவிய கமநெகும அபிவிருத்தித்** திட்டத்தின் பிரகாரமும் கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைய நடைமுறைக்கிடப்பட்டன. இவை அனைத்தும் மூன்று பிரிவுகளாக - பொருளாதாரம் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ஆன்மீக மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய துறைகளில் இடம்பெற்றிருந்தன. இதற்கமைய இந்த அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட 1996 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டின் இறுதி வரை தென் பிராந்தியத்தின் விசேட செயற்திட்டங்களுக்கான செலவுகளுடன் மொத்தமாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென ரூபா 1,701 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

**ஜாதிகசவிய கமநெகும** அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து நடைமுறைக்கிடவென அதிகார சபைக்கு 2010 ஆம் ஆண்டில் 280 மில்லியன் ரூபா திறைசேரியினால் வழங்கப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீட்டில் சம்பந்தப்பட்ட திட்டங்களில் அதிகார சபை 201.1 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் 71.8 சதவீத நிதிப் பெறுபேற்றை அடைந்தது எமக்கு மகிழ்ச்சியூட்டும் விடயமாகும். எஞ்சியுள்ள நிதி ஒதுக்கீடு பெறப்பட்டிருந்தால், 100% சதவீத நிதித்துறை முன்னேற்றத்தை நாம் அடைந்திருப்போம். இந்த வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் பெறுபேறு 80.5 சதவீதமாகும். இத்தகைய நடைமுறைக்கிடப்பட்ட திட்டங்களின் மூலம் பெறப்பட்ட உத்தேச பொருளாதார அனுகூலம் 300 மில்லியன் ரூபாவாகும்.

இவற்றுக்கு மேலதிகமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்புரைக்கு அமைய காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர்கள் ஜாதிகசவிய கமநெகும இரண்டாம் கட்ட திட்டத்தின் கீழ் இந்த மாவட்டங்களில் பொருளாதார உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யவென 2010 ஆம் ஆண்டில் 159.8 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தனர். இந்த நிதியில் 96.7 மில்லியன் ரூபாவை செலவிட்டதன் மூலம் அக்கிராமங்களில் விரைவாக செயல்படுத்த வேண்டிய 215 பொருளாதார உட்கட்டமைப்புத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் நடைமுறைக்கிடப்பட்டன. இதற்கமைய இந்த விசேட திட்டங்களின் கீழ் 69% நிதித்துறை முன்னேற்றத்தையும் 90% பௌதீக முன்னேற்றத்தையும் சபை பெற்றுக்கொண்டது.

2011 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைய பிரதான மூன்று வேலைத்திட்டங்களுக்காக ரூபா 300.5 மில்லியன் செலவிட எதிர்பார்க்கப்பட்டது. அதாவது, திவிநெகும தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 150 கிராமங்களில் 15,000 வீட்டுப் பொருளாதாரப் பிரிவுகளை ஸ்தாபிப்பதும், அவற்றுக்கான விவசாய அபிவிருத்தி, வீட்டுக் கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக ரூபா 215 மில்லியன், ஜாதிகசவிய கமநெகுமவில் எஞ்சியிருந்த திட்டங்களை செயற்படுத்வதற்காக ரூபா 73 மில்லியன் மற்றும் தலைமை அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்கான செலவுகளாக ரூபா 12.5 மில்லியன் என்ற வகையில் செலவிட எதிர்பார்க்கப்பட்டது.

மேலே கூறப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு மொத்தமாக ரூபா 152.3 மில்லியன் செலவிடப்பட்டு, 51% நிதிப் பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதாவது, திட்டங்களில் உள்ளடக்கப்பட்டவாறு மூன்று பிரதான வேலைத்திட்டங்களில் இலக்கு வைத்த அளவில் செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. திவிநெகும தேசிய வேலைத்திட்டத்திற்காக ரூபா 77.4 மில்லியன், ஜாதிகசவிய கமநெகுமவின் எஞ்சியிருந்த வேலைத்திட்டங்களுக்காக ரூபா 62.6 மில்லியன், தலைமை அலுவலகக் கட்டடத்திற்கான செலவுகள் உட்பட ஏனைய செலவுகளுக்காக ரூபா 12.3 மில்லியன் என்ற வகையில் செலவிடப்பட்டன.

மேற்கூறப்பட்ட அனைத்து வேலைத்திட்டங்களுக்காகவும் பௌதீக ரீதியில் 1,048 வேலைத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 529 திட்டங்கள் முற்றாக நிறைவு செய்யப்பட்டு 51% பௌதீக பெறுபேறுகளை 2011 ஆம் ஆண்டில் அடைய முடிந்துள்ளது.

மேற்கூறப்பட்டவாறு அடைந்த மொத்தப் பெறுபேறுகளுக்கு மேலதிகமாக இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததன் மூலம் தென் பிராந்தியத்தின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் பிரதிபலனாக மொத்தமாக ரூபா 280 மில்லியன் அளவிலான பொருளாதாரப் பெறுமதியை மொத்த தேசிய உற்பத்தியில் சேர்க்க முடிந்துள்ளது. அதாவது, திவிநெகும வேலைத்திட்டங்களின் மூலம் ரூபா 154 மில்லியன், ஜாதிகசவிய கமநெகும வேலைத்திட்டத்தின் மூலம் ரூபா 126 மில்லியன் என்ற வகையிலாகும். இந்தப் பெறுமதி பௌதீக வேலைத்திட்டங்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட பெறுமதிகளாகும் என்பதுடன், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீடுகள் இல்லாத 398 பேருக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்ததன் மூலம் அந்த பயனாளிகளுக்கு கிடைத்த புலப்படாத பொருளாதார மற்றும் சமூக சேவைகளின் தாக்கம் 2011 ஆம் ஆண்டில் இச்சபையினால் வழங்கப்பட்ட சேவைகளின் பெறுபேறுகளின் எண்ணிக்கையில் காண்பிக்கப்படவில்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். தெளிவாகக் காணப்படும் சமூக சேவையாகவும் பிரதான தேசிய பிரச்சினை ஒன்றின் பகுதிக்கு வழங்கப்பட்ட தீர்வு என்ற வகையிலும் இந்த வீடமைப்பு வேலைத்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 44.1 மில்லியன் செலவில் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது

திவி நெகும் வேலைத் திட்டத்தின் கீழ் 2012 வருடத்தில் தெற்கு பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 15000 குடும்பங்களை வலுப்படுத்துவது காரணமாகக் கொண்டு, பொருளாதார வளர்ச்சி, வாழ்வாதார அபிவிருத்தி, மற்றும் உற்கட்டமைப்பு அபிவிருத்தி இலக்காகக் கொண்ட பல செயல் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 2011 ஆண்டில் நடைமுறைப் படுத்தி பூர்திச்செய்ய முடியாதிருந்த மற்றும் இடைநிறுத்திருந்த செயல் திட்டங்கள் இவ்வாறு செயல்படுத்திமை விசேடமாக இங்கே குறிப்பிட வேண்டும். 'திவிநெகும' திணைக்களத்தை ஸ்தாபிப்பதற்கான வேண்டிய காரணிகளை ஆராய்ந்து புதிய திட்டங்களுக்கு பண ஒதுக்கீடு செய்யப்படாமையினால் 2012 ஆம் வருடத்தில் புதிய செயல் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை.

2011 வருடத்தில் (பணம் செலுத்தாமல் இருந்த) 264 செயல் திட்டங்களுக்கு செலுத்துவதற்காக 2012 ஆண்டில் திறைசேரியினால் 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கப்பட்டிருதது. பின்பு நிதி அமைச்சின் சுற்றுநிருப ஆலோசனைகளுக்கமைய, 9% வீதம் அதாவது 4.5 மில்லியன் ரூபாவினை சேமிப்பு கணக்காக அகற்றப்பட்டு, 45.5 மில்லியன் ரூபாவினை நிகர ஒதுக்கீடாக இவ்வதிகார சபையிடம் வழங்கப்பட்டது. அவ்வொதிக்கீட்டின் 45.3 மில்லியன் ரூபாவினை உறிய திட்டங்களின் வழங்கல்களுக்காக அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்டது. அதன் பிரகாரம் அனைத்து திட்டங்கள் நிறைவு செய்து, வழங்கல்கள் சார்ப்பில் 99.56% நீதி முன்னேற்றம் பெற்றுக்கொண்டது.

வீட்டு பொருளாதார அலகுகள் அபிவிருத்தி செயல் திட்டங்களுக்காக 2.0 மில்லியன் ரூபாவினையும், வீட்டு பொருளாதார அலகு அபிவிருத்தி செயல் திட்டத்தை வலுப்படுத்தும் செயல் திட்டத்திற்காக 11.8 மில்லியன் ரூபாவினையும், வீட்டு பொருளாதார அலகு அபிவிருத்தி செயல் திட்டத்தை வலுப்படுத்தும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயல் திட்டத்திற்காக 27.5 மில்லியன் ரூபாவினையும், கிராமிய அபிவிருத்திற்கான வேறு செயல் திட்டங்களுக்காக 3.5 மில்லியன் ரூபாவாக மொத்தம் 45.3 மில்லியன் ரூபாவினை செலவு செய்தது.

இதற்கு புறம்பாக 2011 ஆணடில் எஞ்சியிருந்த திட்டங்கள் செயல்படுத்துவதற்காக பொருளாதார அமைச்சு 22.5 மில்லியன் ரூபா ஒதுக்கியது. அந்நிதியத்திலிருந்து உன்மையிலேயே கிடைத்த 9.5 ரூபா உறிய திட்டங்களுக்காக செலவு செய்தது. உன்மையாகவே பணம் கிடைக்கின்ற அளவுக்கமைவாக, 42% நிதித் துறையில் முன்னேற்றம் அடைய முடிந்தது. மேலும் நிறைவு செய்வகறகு இலக்கு கொண்ட 324 திட்டங்களில் 294 திட்டங்களை பூத்தி செய்து 90.74% பௌதீக பெறுபேறுளை பெற்றன.

மேலும் 'குடிசைகளிலிருந்து புதிய உலகத்கிற்கு' என்ற தொனிப்பொருளின் கீழ் ஹம்பந்தொட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வீடுகள் இல்லாத 600 வறிய குடும்பங்களுக்கு வீடு வசதிகளை கட்டிக் கொடுப்பதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 91.8 மில்லியன் ரூபாவை ஒதுக்கப்பட்டதுடன் அதிலிருந்து உன்மையாகவே கிடைத்த பணம் 75.06 மில்லியன் ரூபா என்பதை குறிப்பிடத்தக்கது. வீடமைப்புக்காக ஒதுக்கிய பணம் 750.4 மில்லியன் ரூபாவாகும். இதன்படி நிதித்துறை பெறுபேறுகள் 99.7 மில்லியன் ரூபா என்பதை குறிப்பிடத்தக்கது. 600 வீடகளிலும் மேற்கூரை வரையிலான நிர்மான பணிகள் செய்திருப்பதோடு முழுமையாக வேலைகள் முடிவடைந்த வீடுகள் 510 ஆகும். பெற்றுக்கொண்ட பௌதீக பெறுபேறு 85% ஆகும்.

மேலே கூறப்பட்ட திவிநெகும வேலைத்திட்டத்திற்கு அமைவான திட்டங்கள், ஜாதிகசவிய கமநெகும வேலைத்திட்டத்திற்கு அமைவான திட்டங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட வீடமைப்பு வேலைத்திட்டம் ஆகியவற்றின் மூலம் தென் பிராந்தியத்தில் இரண்டு இலட்சத்தை (200,000) தாண்டிய மக்களுக்கு சேவையாற்ற முடிந்தது. நாம் பெற்ற மாபெரும் ஒரு வெற்றியாகும். அதன் மூலம் அவர்களது உணவு உற்பத்தியை அதிகரித்தல், வருமான மற்றும் போஷாக்கு மட்டம் என்பனவற்றின் வளர்ச்சி ஆகியன குறிப்பிடத்தக்கதாகும். இதன் பலனாக அம்மக்களை தேசிய பொருளாதாரத்தின் பங்காளிகளாக மாற்ற முடிந்துள்ளது. அதன்

மூலம் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு மேலே கூறப்பட்டவாறு ரூபா 300 மில்லியன் பங்களிப்பையும் வழங்க முடிந்துள்ளது. இவற்றின் அடிப்படையில் இச்சபையை அமைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அதாவது, சட்டத்தின் 12ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளை அடைய முடிந்துள்ளது. அதனை சுருக்கமாகக் கூறுவதாயின், இச்சபையானது 1996 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தினத்திலிருந்து 2012 டிசம்பர் 31 ஆம் திகதி வரை தென் மாகாணத்தில் செயற்படுத்திய சாதாரண மற்றும் விசேட வேலைத்திட்டங்களுக்காக மொத்தமாக ரூபா 2,550 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. அதுபோன்ற பலமடங்கு பங்களிப்பை நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் சேர்க்கவும் முடிந்துள்ளது. அத்துடன், தென் பிராந்திய மக்களின் பொருளாதார மற்றும் வாழ்க்கை நிலை ஆகியவற்றில் வளர்ச்சியை ஏற்படுத்தவும், இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் அவற்றின் பலனாக மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் சமூக நிலையை உயர்த்தவும் இச்சபையினால் முடிந்துள்ளது. இங்கு கூறப்பட்ட அனைத்து நடவடிக்கைகளின் மூலமும் தென் பிராந்தியத்தின் பொருளாதார சுபீட்சத்திற்காக 2012 ஆண்டில் குறிப்பிடத்தக்கதொரு சேவையை ஆற்ற சபையினால் முடிந்துள்ளது.

## 2012 ஆண்டில் மனித வள அபிவிருத்திற்காக எடுக்கப்பட்ட சிறந்த செயல்கள்.

1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வதிகார சகைக்கு அடிப்படை அளவிலான அமைப்பு முறை மட்டுமே இருந்துவந்தது. அதேபோன்று அதிகார சபையில் பணிக்குழு சேர்ப்பதிலோ, மற்றும் தரமுயர்த்ததிலோ எந்தவொரு ஒழுங்கு முறையும் காணப்படவில்லை. இந்நிலையை கருத்திற் கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 30 ஆம் இலக்கமுடைய சுற்றுநிறுபத்தில் உள்ள விதிகளின்படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மற்றும் தேசிய வேதனங்கள் மற்றும் ஊழியர்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம், மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின் கீழ் 2012 ஆண்டு தை மாதத்திலிருந்து, இவ்வதிகார சபைக்கு புதிய ஏற்பாட்டு அமைப்பு முறையொன்றையும் ஒழுங்கான ஆட்சேர்ப்பு முறையையும், ஒழுங்கான தரமுயர்ப்பு முறையையும் கடைபிடிக்க முடிந்த்மை மனித வள அபிவிருத்திற்காக எடுக்கப்பட்ட ஒரு முக்கியமான செயலாகும். இதனடிப்படையில் 261 மொத்த ஊழியர் எண்ணிக்கையில் 193 பேருக்கு (74%) அவர்கள் வகுத்திருந்த பதவியில் அடுத்த தரத்திற்கு தரமுயர்வு கிடைத்தது. இச்செயல்கள் மூலம் ஊழியர் குழுவின் தொழில் திறனை குறிப்பிடத்தக்க அளவில் உயர்படுத்த இயன்றது. இதன் ஊடாக அவர்களின் எதிர்கால கடமைகளுக்கு அவர்களின் அர்ப்பணிப்பு உறுதுணையாக அமைவதோடு கூடுதலான சேவையாற்றல் கிடைக்குமென எதிர்ப்பார்க்கப்படலாம்.

**திவிநெகும திணைக்களத்தை நிறுவுதல்**

இவ்வதிகார சபையும் மற்றும் இனங்காணப்பட்ட 4 அரச நிறுவனங்களும் ஒன்றிணைந்து திவிநெகும திணைகளம் என்ற பெயரில் புதியதொரு திணைக்ளமொன்று ஸ்தாபிக்க அரசாங்கத்தால் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் **2013 ஆம் ஆண்டு இலக்கம் 01 திவினெகும திணைக்களச் சட்டம** என்னும் பெயர்க் கொண்டாகவிருக்கும். இத்தருணத்தில் திணைக்களத்தின் அமைப்பு மற்றும் அதற்கேற்ற ஆரம்ப நடவடிக்கைகளை உத்தியோக பூர்வமாக தயாரிப்பதில் பொருளாதார அமைச்சு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. திவினெகும திணைக்களத்தை ஸ்தாபிப்பதற்கான வர்த்தமானி பத்திரத்தை வெளியிட்ட பின்பு அத்திணைக்களத்தின் செயல்களை உத்தியோக பூர்வமாக ஆரம்கிக்க உள்னது. அத்துடன் திவி நெகும திணைக்களம் ஒருங்கிணைக்கப்பட்ட அரச நிறுவனங்கள் நான்கு மற்றும் இவ்வதிகார சபையும் உத்தியோக பூர்வமாக அற்றுப் போகும்.

**ஏ.பி.எஸ்.ரஞ்சித் குணசேகர**
தலைவர்.்.பணிப்பாளர் நாயகம்
இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நடவடிக்கைகள்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கமான அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

**கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகள்**

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பாட்டு எல்லையைத் தீர்மானித்தல்.

- நிதித்துறை சம்பந்தமான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் தீர்மானங்கள் மேற்கொள்வதில் பணிப்பாளர் சபைக்கு உதவுதல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் தொகுப்பை பணிப்பாளர் சபையினர் தீமானங்களை மேற்கொள்வதற்கென காலத்திற்குக் காலம் சமர்ப்பித்தல்.
- உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் சம்பந்தமான வழிமுறைகளை மீளாய்வு செய்தல்.
- உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் விளைபயனைக் கண்காணித்தல்.
- நியதிச்சபைகள் மற்றும் உள்ளகச் சட்டங்கள், பிரமாணங்கள் என்பன ஊழியர்களினால் கடைப்பிடிக்கப்படுவது பற்றியும், ஊழியர்களின் நடவடிக்கை சம்பந்தமாகவும் மீளாய்வு செய்தல்.
- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் தீர்வுகளை கணக்குகள், நிதிச் செயற்பாடு என்பனவற்றின் அடிப்படையில் மீளாய்வு செய்தலும், அவற்றை பணிப்பாளர் சபைக்கு காலத்திற்குக் காலம் அறிவித்தலும்.
- ஊழியர்களின் ஒழுக்காற்றல், வளங்களின் விரையம், இலஞ்ச ஊழல் என்பன சம்பந்தமான விடயங்களில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அறிக்கைகளை மீளாய்வு செய்தலும் பரிந்துரைகளை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்தலும்.
- உள்ளக மற்றும் கணக்காய்வுத் திணைக்கள அறிக்கைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பின்நோக்கைப் பெற்றுக்கொள்ளுதல்
- அரச நிறுவனங்கள் குழுவின் (COPE) பரிந்துரைகளை நடைமுறைக்கிடுவதன் மீளாய்வும் பின் நோக்கும்.

**குழுவின் அமைப்பு**

கீழே குறிப்பிடப்பட்ட ஐந்து அங்கத்தவர்களை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கொண்டுள்ளது.

**குழுவின் அங்கத்தவர்கள்**

01. திரு. ஏ. கே. ஏ. வை. தரங்க — தலைவர்
பதில் பணிப்பாளர் - நிதித் துறை திணைக்களம்
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
(2012.10.13 இருந்து )

02. திரு டீ. சீ. சிரிபத்தன — குழு அங்கத்தவர்
பணிப்பாளர் - நிதி திட்டமிடல் அமைச்சு
பணிப்பாளர் குழு அங்கத்தவர்
ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

03. திரு. சரத் அமரவீர — குழு அங்கத்தவர்
பணிப்பாளர் சபை உறுப்பினர்
தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

04. திரு. சுனில் சூரியபண்டார — குழு அங்கத்தவர்
பணிப்பாளர் குழு அங்கத்தவர்
தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

05. திரு. ஜே.கே.பத்மசிரி — குழு அங்கத்தவர்
பணிப்பாளர் ( நிதி மற்றும் நிருவாகம்)
மாத்தறை

06. திரு. எஸ்.சீ.வனிகதுங்க — குழுவின் அமைப்பாளர்
உள்ளகக் கணக்காய்வாளர்
தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

07. திரு. எச்.டீ. ஆரியரத்ன — அவதானிப்பு
கணக்காய்வு அதிகாரி
கணக்காய்வுத் திணைக்களம், மாத்தறை.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் நிறைவேற்று அதிகாரமற்ற மூன்று பணிப்பாளர்கள் இடம் பெற்றுள்ளனர். அதாவது, டீ. சீ. சிரிபத்தன,(2011.04.08 - 2012.10.12 ) நிதி அமைச்சை பிரதநிதிப் படுத்தி குழுவின் தலைவராக செயலாற்றினார். பின்பு 2012.10.13 ஆம் திகதியிலிருந்:து தி:ரு. ஏ. கே. வை தரங்க அவர்கள் நிதி அமைச்சைப் பிரதிநிதிப் படுத்தி குழுவின் தலைவர் பதவியை வகித்தார்.

### குழுக் கூட்டங்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2012 ஆம் ஆண்டில் ஐந்து தடவைகள் கூடுகின்றது. (ஜனவரி, மார்ச், மே, ஒக்டோபர், டிசம்பர்) இக்குழுக் கூட்டங்களுக்கு தேவைப்படும்போது அதிகார சபையின் பணிப்பாளர் (கொள்கை திட்டமிடல்) மற்றும் உறிய ஏனைய அதிகாரிகளும் கலந்துகொள்ளப்பட்டனர். அதன் பிரகாரம் மேற்குறித்த செயற்பாடுகள் ஊடாக தேவையான நடவடிக்கைகள் தேவையான நேரத்தில் எடுக்கப்ட்டன.

### நிதித்துறை சம்பந்தமான அறிவித்தல்

அதிகார சபையின் கணக்கியல் மற்றும் நிதித்துறை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பின் ஒரு பகுதியாக, வருடாந்த கணக்கியல் மற்றும் நிதித்துறை அறிக்கைகளை இலங்கை கணக்கியல் தரத்திற்கு இணங்கிக்கொள்வது பற்றியும், அந்த அறிக்கையை தயாரிப்பது சம்பந்தமாகவும், முகாமைத்துவத்தினருடன் கலந்துரையாடி குழு மீளாய்வு செய்துள்ளது. இதற்கமைய பொருத்தமான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

### இடர்களும் கட்டுப்பாடுகளும்

ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் அதிகார சபையின் கணக்கியல் வழிமுறைகளையும், உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும், குழு மீளாய்வு செய்து, உறிய வருடத்தில் தேவை ஏற்பட்ட இடங்களில் அவற்றை ஒழுங்கமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் சுதந்திரம் மற்றும் கணக்காய்வு வழிமுறைகளின் முன்னேற்றம் என்பனவற்றின் வருடாந்த மதிப்பீட்டை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மேற்கொள்ளப்படுகிறது. இந்த வகையில், கணக்காய்வு அறிக்கைகளின் எல்லை மற்றும் அவற்றின் மீதான முகாமைத்துவத்தின் நடவடிக்கைகள் உட்பட உள்ளகக் கணக்காய்வு அணுகுமுறைகள், வழிமுறைகள், கணக்காய்வு அறிக்கைகள் என்பனவும் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டன. அமைப்பாளர் என்ற வகையில், உள்ளகக் கணக்காய்வாளர் சகல உள்ளகக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தேவையின் அடிப்படையில் அழைத்திருந்தார். திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வுகள், விசாரணைகள் என்பனவற்றின் முக்கிய தீர்மானங்களின் தொகுப்பை காலத்திற்குக் காலம் இந்தக் குழுவிற்கு அவர் சமர்ப்பிக்கப்படும்.

### சட்டதிட்டங்களுக்கு அமையாமை

நியதி மற்றும் உள்ளகச் சட்டங்கள், பிரமாணங்கள் என்பன முகாமைத்துவத்தினரால் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை அவதானிக்கவென உருவாக்கப்பட்ட வழிமுறைகள் போதியதாக உள்ளனவா என்பதை குழு மீளாய்வு செய்துள்ளது. நிதி மற்றும் நிர்வாக வழிமுறைகள், நடவடிக்கைகள், சம்பவங்கள் என்பனவற்றின் வெளிப்படைத்தன்மை சம்பந்தமான அறிக்கையை உள்ளகக் கணக்காய்வாளர் ஒழுங்கான அடிப்படையில் கணக்காய்வுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும்..

## தவறுகள் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள்

ஊழியர்களினால் தார்மீக உணர்வுகள் மீறப்படல், மோசடி நிலைமையை உருவாக்குதல் என்பன பற்றி ஊழியர்களினால் முன்வைக்கப்படும், ஊழியர் முறைப்பாடுகள் குழு ஆராய்ந்து பார்க்கும்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இவை பற்றி மீளாய்வு செய்துள்ளது. கணக்காய்வுப் பிரிவினரின் தவறுகளையும், மோசடிகளையும் கண்டுபிடித்துத் தடுப்பதற்கென முகாமைத்துவத்தினரால் அறிமுகம் செய்யப்பட்ட பலதரப்பட்ட வழிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு பூரண சுதந்திரத்தை குழு நிச்சயித்துள்ளது. இத்தகைய விடயங்கள் சம்பந்தமான சுதந்திர விசாரணைகளை பாதுகாப்பதற்கென உருவாக்கப்பட்ட வழிமுறைகள் பொருத்தமானவை என்பதையும் குழு நிச்சயித்துள்ளது.

**திரு ஏ. கே. ஏ. வை. தரங்க அவர்கள்**
தலைவர்-
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

## 2012 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் பெறுபேறுகள் அறிக்கை

## 1. அறிமுகம்

ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை, தென் பகுதியின் பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு 1996ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தினால் அமைக்கப்பட்டதாகும். 1996ம் ஆண்டு முதல் இது வரையிலான 16 வருட காலத்தில் அதிகார சபை காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இரத்தினபுரி மாவட்டத்தின் கொலன்ன மற்றும் எம்பிலிபிட்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் சகல பிரதேச எல்லைகளிலும் பிரதேச அபிவிருத்திக்காக பாரிய அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றி வருகிறது. இவ்வாறான பின்னணியில் 2011ம் ஆண்டுக்கான இந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதன் நோக்கம், அதிகார சபையின் மூலம் 2011ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயல்திட்டங்களின் பல்வேறு படிமுறைகளின் மூலம் அதிகார சபை மீது நேசம் வைத்துள்ள பல தரப்புக்களையும் சேர்ந்தவர்களும் அறிந்து கொள்வதற்காக சமர்ப்பிப்பதாகும். இதன் மூலம் அதிகார சபைக்கு நிதியொதுக்கும் திறைசேரியின் நிதி ஒதுக்கீடு, அதிகார சபையின் நோக்கங்களை அறிந்து கொள்ளவும், தென்பகுதி மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவும் எந்தளவு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பில் விளக்கம் அளிக்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் அறிக்கைகளில் ஐந்து அத்தியாயங்களை உள்ளடக்கியதுடன், இதன் முதலாவது அத்தியாயத்தில் அறிமுகப்படுத்தலும், இரண்டாம் அத்தியாயத்தில் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் சட்டரீதியான நிலை, பூகோள அதிகார எல்லை, சபையின் நோக்கம், அதிகாரம், பணி, நியதி, தகவல், தொலைநோக்கு, சேவை மற்றும் அதிகார சபையின் பெறுமானம் வரை குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று, மூன்றாவது அத்தியாயத்தின் மூலம் இலங்கை இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் இதுவரையிலான கடந்தகாலப் பயணப்பாதை குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் முறையாக தென் பகுதியின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த தெற்குப் பிரதேசத்தில் அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் தாக்கம் மூன்று கட்டங்களின் கீழ் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான்காம் அத்தியாயத்தில் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை மூலம் 2012ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலான பல படிமுறைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இறுதியாக, ஐந்தாவது அத்தியாயத்தில், 2012ம் ஆண்டின் மொத்தச் செயற்றிட்டங்கள் பற்றிய சாராம்சம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் வசதிகருதி இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஆரம்பம், இதன் கட்டமைப்பு உட்பட பணிகள் தொடர்பிலான விளக்கம் இரண்டாம் அத்தியாயத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

## 2. ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை பற்றிய அறிமுகம்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையை ஸ்தாபிப்பதற்கான சட்டரீதியான நிலை, அதிகார சபையின் எல்லைப்பகுதி, சபையின் நோக்கம், அதிகாரம், பணி தொடர்பில் கவனம் செலுத்தும் போது கீழ் காணும் வகையில் விளக்க முடியும்.

### 2.1 இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் சட்டபூர்வ நிலை

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை 1996ம் ஆண்டு 18ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டு, அரச நிதி மூலம் செயற்படும் ஒரு அரச நிறுவனமாகும்.

### 2.2 பூகோள அதிகார எல்லைப் பகுதி

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் அதிகார எல்லைப் பகுதி அதிகார சபை சட்டத்தின் 3(1) பிரிவுக்கு அமைய, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய நிர்வாக மாவட்டங்களையும், இரத்தினபுர மாவட்டத்தின் கொலன்ன, எம்பிலிபிடிய பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியக்கியதாகும். இதற்கு அமைய இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை 60 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசத்தைக் கொண்டுள்ளது. இந்த அதிகார எல்லைகளை குறிப்பிடும் வரைபடம் அதிகார சபையின் இலச்சினையுடன் கீழே தரப்பட்டுள்ளது.



**2.3 அதிகார சபையின் நோக்கம், அதிகாரம், பணிகள் (சட்டதின் 12 ஆம் பிரிவு)**

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கம், அதிகாரம், பணி சட்டத்தின் 12ம், 13ம் சரத்துக்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

**2.3.1 அதிகார சபையின் நோக்கம் (சட்டத்தின் 12வது சரத்திற்கு அமைவாக)**

(அ) உற்பத்தியை அதிகரித்தல், பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல், வருமானம் மற்றும் தொழில்வாய்பை விஸ்தரித்தரித்தல், அபிவிருத்தித் திட்டங்களை குறிப்பிட்ட பிரதேசங்களில் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல்.

(ஆ) குறிப்பிட்ட பிரதேசத்தின் மொத்த அபிவிருத்தித் திட்டத்தில் இனங்காணப்பட்ட திட்டங்களுக்கு முதலிடம் வழங்கி வரிவாக ஆராய்தல்.

(இ) குறித்த திட்டத்துக்கு அல்லது நிகழ்ச்சிக்கு வெளிநாட்டு நிதியை பயன்படுத்துவது தொடர்பில் உரிய அமைச்சரின் அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்தல்.

(ஈ) (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்தல் மற்றும் குறிப்பிட்ட பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்க திணைக்களங்கள், ஏனைய அரசாங்க நிறுவனங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் பொது அல்லது தனியார் நிறுவனங்கள் மற்றும் பிரமுகர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல் மற்றும்

(உ) (ஆ) பந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆய்வு செய்தல், குறிப்பிட்ட பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தனியார்துறை முகவர் நிறுவனங்களின் பங்கேற்பைப் பெற்றுக் கொள்ளல்

**2.3.2. அதிகார சபையின் அதிகாரங்களும், பணிகளும் (சட்டத்தின் 13வது பிரிவுக்கமைய அமைவாக)**

(அ) அதிகார சபைக்கென உள்நாட்டு, வெளிநாட்டு முக்கியஸ்தர்களிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளல்

(ஆ) குறிப்பிட்ட பிரதேசத்தின் விஷேட அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் ஆராய்தல் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்நாட்டு வெளிநாட்டு பங்கேற்பைப் பெற்றுக் கொள்ளல்.

(இ) குறிப்பிட்ட பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத் திட்டங்களை திட்டமிடும் போது ஒத்துழைப்புடன் செயற்படுமாறு, இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய பிரமுகர்களிடமும் வேண்டுகோள் விடுத்தல்.

(ஈ) அதிகார சபையினால் பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களை பொறுப்பேற்று, பராமரித்து, ஒழுங்குபடுத்துமாறு ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தல்.

(எ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்ற உரிய ஒவ்வொரு விடயம் பற்றி அதிகார சபையிலேயே திணைக்களங்களையும், முகவர் நிலையங்களையும் அமைத்தல்.

(ஏ) குறிப்பிட்ட பிரதேசத்தின் பொருளாதார, சமூக அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஆய்வுகளை நடத்துதல்.

(உ) குறிப்பிட்ட பகுதியில் குறித்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் சுற்றாடல் தாக்கங்கங்களை மதிப்பிட்டு அறிக்கை தயாரித்தல்.

(ஊ) அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும் கேள்விப்பத்திர நடைமுறைக்கு அமைவாக கேள்விப் பத்திரங்களை வழங்குதல்.

(ஒ) குறிப்பிட்ட பகுதியில் அதிகார சபையினால் நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக கட்டணத்தை நிர்ணயித்தல் அல்லது கட்டணம் அறவிடுதல்.

(ஓ) குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த அவசியமான அலுவலகத் தேவை உபகரணங்கள் அல்லது ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்தல், பராமரித்தல், நிமாணித்தல், கையேற்றல், மீளமைத்தல் அல்லது தயாரித்தல்.

(ஔ) பொது அல்லது தனியார் நிறுவனத்தின் மூலம் அல்லது பொது அல்லது தனியார் நிறுவனத்தின் மூலமோ இணைந்தோ அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(ஃ) நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் இலங்கையின் பிரதான மூலங்களிடம் இருந்து நிதியை கடனாகப் பெறல், நிதியைப் பெறல், பிணைப்புக்களை ஏற்றல்.

(க) நிலையான சொத்து எதனையும், எந்தவகையிலும் பொறுப்பேற்றல், வைத்திருத்தல், வரி அறவிடுதல் அல்லது வாடகைக்கு விடல், அடகு வைத்தல், விற்பனை செய்தல்

(கா) அரசியல் அமைப்பு மற்றும் ஏனைய எழுதப்பட்ட சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாக அதிகார சபையின் நோக்கங்களை நிறைவு செய்துகொள்ள அல்லது சட்டத்தின் கீழ் அதிகார சபையின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முறைகள் அல்லது வழிவகுக்கும் அனைத்து செயற்பாடுகளும்.

## 2.4 கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் கூட்டிணைக்கப்பட்ட தகவல்களின் இரு பகுதியாக, அதிகார சபையின் தொலைநோக்கு, பணிகள், பெறுமானம் என்பவற்றை பின்வருமாறு விளக்க முடியும்.

### 2.4.1 தொலைநோக்கு

எமது தொலைநோக்கானது, இளைஞர், யுவதிகளுக்கு கவர்ச்சிகரமான மற்றும் சவால்களைக் கொண்ட வாய்ப்புக்களை ஏற்படுத்தி, துரிதமாக அபிவிருத்தி கண்டுவரும் ஆசிய பசுபிக் வயலத்துக்கான நுழைவுப் பாதையாக இப்பகுதியை திறந்தது சுற்றாடல் ரீதியாக தாங்கிக்கொள்ளும் வகையிலும், கலாசார ரீதியில் ஏற்பட்ட சூழலில், பொருளாதார ரீதியில் சுபீட்சமடைந்த தென் இலங்கையை உருவாக்குதல்.''

### 2.4.2 பணி

எமது பணியானது, சவால்மிக்க வாய்ப்புக்களைக் கொண்ட சூழலில், உயர்மட்ட வாழ்க்கை நிலையில், பிரதேசத்தின் வளங்கள் மற்றும் தேவைகளை அடையாளம் கண்டு, தனியார்துறை மற்றும் முகவர் நிலையங்களை தொடர்புபடுத்தி, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தலும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மட்டத்தில் மொத்த தேசிய உற்பத்தியை அடைந்துகொள்ள ஒத்துழைப்பு வழங்குதலும், பிரதேசத்தின் மொத்த தேசிய உற்பத்தியின் துரிதமான வளர்ச்சிக்கு ஒத்துழைத்தலுமாகும்.

### 2.4.3 பெறுமானம்

எமது பெறுமானங்களாவன,

- வாடிக்கையாளர்களுக்காக அர்பணிப்புடன் கூடிய சேவை
- ஒத்துழைப்பு மற்றும் நிபுணத்துவத்தை அடைவதற்கான வலுவூட்டல்.
- ஒழுங்கு நெறி
- ஏனையவர்களுக்கு மதிப்பளித்தல்.
- செவிமடுத்தல், எண்ணுதல், சவால்களைப் பொறுப்பேற்றல், சிறப்பாக பணியாற்றல்

## 3. ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை இதுரை கடந்த பாதை

2012 வருடத்திற்கான இந்த செயற்பாட்டறிக்கை பாவிப்பவர்களுக்கு அதிகார சபையின் ஆரம்பத்தில் இருந்து இது வரை, படிப்படியாக முன்னேற்றம் அடைந்ததைப் பற்றிய அறிவை பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் அளிக்கும் பொருட்டு எமது அதிகாரச சபையால் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மூன்றாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.1 1996 முதல் 2011 வரையிலான காலப்பகுதியின் அபிவிருத்தி **நடவடிக்கைகள்**

ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர், கடந்த 16 வருடங்களில், பல்வேறு பங்கேற்புக்களின் ஊடாக, தென் பகுதியில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தென் பகுதியின் நலனைக் கருத்தில் கொண்டு, இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைப்படுத்திய முறையை பின்வரும் மூன்று காலப்பகுதிகளின் கீழ் கலந்துரையாட முடியும்.

3.1 1996 முதல் 1998 வரையிலான காலப்பகுதி
3.2 1998 முதல் 2006 வரையிலான காலப்பகுதி
3.3 2007 முதல் 2011 வரையிலான காலப்பகுதி

மேற்கூறப்பட்ட மூன்று காலப்பகுதிகளில் ஆரம்பக் கட்டமான 1996 முதல் 1998 வரையான காலப்பகுதி, தென் பிராந்தியத்தில் புதிய அபிவிருத்திக்கான எதிர்பார்ப்புக்களுடன் பெருமளவு திட்டங்களை வகுத்த காலப்பகுதியாகக் கருதப்படும். அக்காலப்பகுதிகளில் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

### 3.2 1996 முதல் 1998 வரையிலான காலப்பகுதி (யுகம்)

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் அதாவது 1996 முதல் 1998ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், அப்போதைய அரசாங்கத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதோடு, நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும் கணிப்புக்களின் மூலம் தென் பகுதியை இலங்கையின் வினைத்திறன் வாய்ந்த பொருளாதார மத்திய நிலையமாக மாற்றியமைப்பதற்கு தேவையான பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

இதற்கமைய தெற்கு அபிவிருத்தி எண்ணக்கருவின் (ருஹுனுபுர) மூலம் மற்றும் தென் பகுதியின் நுழைவுப் பகுதியாக இனங்காணப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பூர்வாங்க ஆய்வை நடத்தி, திட்டமிட்டு தென் பகுதியை பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதற்குப் பொருத்தமான பௌதீக மற்றும் மனித வளங்களினாலான பகுதியாக இனங்காட்டப்படுகிறது. இந்தக் கற்கையின் மூலம் இனங்காணப்பட்ட திட்டங்களை உரிய நிறுவனத்தின் மூலம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமை இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை பெற்ற வெற்றியாகும். இந்தத் திட்டங்கள் பின்வருமாறு அமைந்திருக்கும்.

- ஹம்பந்தோட்டை சர்வதேச துறைமுக நிர்மானம்
- தெற்கு அதிவேகப் பாதை
- தென் பகுதிக்கிடையிலான மாதிரி போக்குவரத்து வலையமைப்பு தொடர்பு பற்றிய யோசனை
- காலித் துறைமுக அபிவிருத்தி
- தெற்கின் சர்வதேச விமான நிலையம்
- மாத்தறை முதல் கதிர்காமம் வரை ரயில் பாதையை அமைப்பதற்கான யோசனை

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஆரம்பப் பயணத்தின் முதல் பணியாக 1999ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியைக் குறிப்பிட முடியும். இக்காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பணிகள் தொடர்பில் பின்வரும் வகையில் விளங்கிக் கொள்ள முடியும்

### 3.3 1999 முதல் 2006 வரையிலான காலப்பகுதி (யுகம்)

இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் அடிப்படை பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் 1999ம் ஆண்டு முதல் 8 அபிவிருத்தி பிரிவுகளின் கீழ் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கைத்தொழில், பொருந்தோட்டம், மீன்பிடி, பயிற்சி, விவசாயம், காணி, சந்தைப்படுத்தல் சேவை என்பவற்றைக் குறிப்பிட முடியும். இந்தத் துறைகளின் கீழ் பிரதேச அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பல திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதற்கமைய, குறிப்பாக, தென் பகுதியில் உள்ள சிறிய மற்றும் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் மீது கவனம் செலுத்தி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை தென்பகுதிக்கு அழைக்க பாரியளவிலான சேவையை நிறைவு செய்ததோடு, கைத்தொழில்களை ஏற்படுத்த தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இந்தக் கைத்தொழில்களில் சிலவற்றை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

- **மாத்தறை திஹகொட ஒலியகொடவத்த அனல் மின்நிலையம்**

தொழிற்சாலைகளை நடைமுறைப்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் திட்டமாக திஹகொட ஒலியகொடவத்தை பகுதியின் அனல் மின் நிலையத்தை குறிப்பிட முடியும். இதற்கு 50 ஏக்கர் விசாலமான நிலப்பரப்பு இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் மஸ்தியஸ்தத்துடன் ஏஸ் பவர் ஜெனரேஷன் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. தற்போது இந்த அனல் மின் நிலையத்தின் மூலம் 480 முதல் 576 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் இணைக்கப்படுகிறது.

- **மாத்தறை மிதிகம லோட் ஸ்டார் தொழிற்சாலை**

தொழிற்சாலைகளை நடைமுறைப்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் மற்றுமொரு திட்டமாக மிதிகம பகுதியில் டயர் ஏற்றுமதிக்கான லோட் ஸ்டார் தொழிற்சாலையைக் குறிப்பிட முடியும். இதனை அமைப்பதற்கான காணி, உட்கட்டமைப்பு வசதிகள் அனுமதிப்பத்திரம் என்பவற்றைப்பெற ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் நடவடிக்கை இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் மஸ்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் நேரடியாக 5,700 தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு, ரப்பர் பால் விநியோகிக்கும் 2000க்கும் அதிகமானவர்களின் பொருளாதார மட்டம் தொழிற்சாலை நிறுவப்பட்டதன் மூலம் அதிகரித்துள்ளது. இத்திட்டத்தின் முக்கியத்துவமானது, இந்தத் தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் டயர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம், வருடாந்தம் குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணியை நாம் பெற்றுக்கொள்கின்றோம் என்பதாகும்.

- **மாத்தறை கும்பல்கம இசுரு செரமிக் உற்பத்தி நிறுவனம்**

இது களிமண்ணைப் பயன்படுத்தி அழகிய பீங்கான் வகைகளை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையாகும். இதற்கான முதலீடு 3 மில்லியன் ரூபாவாகும். இது உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தைகளை இலக்காகக் கொண்ட ஒரு பிரதானமான தொழிற்சாலையாகும். இதன் நாளந்த உற்பத்தி 500 அலகுகள் என்பதோடு மாதாந்த வருமானம் 100,000 – 200,000 ரூபாக்கு இடைப்பட்டதாகும். நேரடியாக 11 தொழில் வாய்ப்புக்களும், மறைமுகமாக 4 தொழில் வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் பாரியளவிலான கேள்வி நிலவியதோடு, உற்பத்திக்கு தேவையான கொள்ளளவு இங்கு நிலவும் குறைபாடகும். இக்குறைப்பாட்டை ஈடு செய்வதற்கென முதலீட்டாளர்களுக்கு சபை எப்போதும் உதவி புரிந்து வருகின்றது.

- **எம்பிலிபிட்டிய தொழில்முயற்சி கேந்திர நிலையம்**

கைத்தொழிலை நடைமுறைப்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் மற்றுமொரு திட்டமாக எம்பிலிபிட்டிய தொழில்முயற்சி கேந்திர நிலையத்தை குறிப்பிட முடியும். முதலீட்டை வலுப்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் மூலம் கைவிடப்பட்ட 06 கட்டடங்களை மறுசீரமைத்து வெற்றிகரமான 05 திட்டங்களை நடைமுறைப்படுத்த தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு போக்கரி உற்பத்தி, வீட்டுப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள் தயாரித்தல் திட்டம் தொடர்பில் அச்சு ஊடகப் பிரசாரத்தை வழங்குதல், அப்பியாசப் புத்தக உற்பத்தி, கணணி மூலம் பதிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நேரடியாக 120 தொழில் வாய்ப்புக்களையும், மறைமுகமாக 200 தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்க முடிவதோடு, மொத்த தேசிய உற்பத்திக்கு 05 மில்லியன் ரூபாவை வருடாந்தம் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

- **மாத்தறை கம்புறுபிட்டிய ரட்டலங்காவத்த ஒடோலங்கா டயர் உற்பத்தி தொழிற்சாலை**

தொழிற்சாலைகளை நடைமுறைப்படுத்தத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் மற்றுமொரு திட்டமாக, மாத்தறை கம்புறுபிட்டிய ரட்டலங்காவத்த ஒடோ லங்கா டயர் உற்பத்தித் தொழிற்சாலையை குறிப்பிட முடியும். இங்கு 96 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், டயர் உற்பத்திக்கு தேவையான பட்டியை தயாரிதல் மற்றும் உரிய பசை உற்பத்தி (இது ஆரம்பத்தில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது) மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு 05 ஏக்கர் நிலப்பரப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, 80 பேருக்கான தொழில்வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் மூலம் 400 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணியை சேமிக்க முடியும். இங்கு மூலப்பொருளாகக் காணப்படும் ரப்பருக்கான தேசிய கேள்விக்கான விநியோகத்தின் போது சிறிய 2,000 ரப்பர் தோட்ட உரிமையாளர்களின் வருமானத்தை மேம்படுத்த முடியும்.

- **செயலிழந்து காணப்பட்ட தேயிலை தொழிற்சாலையை மீளக் கட்டியெழுப்பல்**

பல வருடங்களுக்கு முன்னர் செயலிழந்து காணப்பட்ட தேயிலைத் தொழிற்சாலையை கட்டியெழுப்பி, தென் பகுதியின் பொருளாதாரத்தில் பாரிய பணியை மேற்கொள்ளக் கிடைத்தமை தெற்கு அபிவிருத்தி அதிகார சபைக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றியாகும். இதில், மாத்தறை கலகாவ தேயிலை தொழிற்சாலை, காலி தவளம ஜஸ்மின்வலி தேயிலைத் தொழிற்சாலை, வலஸ்முல்ல ஹந்துகல தேயிலைத் தொழிற்சாலை மற்றும் கொலன்ன பனில்கந்த தேயிலைத் தொழிற்சாலை என்பன அடங்குவதுடன் இந்த அனைத்துத் திட்டங்கள் மூலமும் அந்நியச் செலாவணியை ஈட்டும் சந்தர்ப்பம் கிடைத்தமை நாம் பெற்ற மற்றுமொரு வெற்றியாகும்.

இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அபிவிருத்தித் திட்டங்களுக்காக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு மேலதிகமாக, இந்தக் காலப்பகுதியில் இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் அனைத்து அதிகார எல்லைப் பகுதிகளில், சகல பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட குறுகிய கால அபிவிருத்தி திட்டத்தின் மூலம், கிராமியப் பொருளாதாரத்தை அதிகரிக்க ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது. விடேமாக, இதன் கீழ் கிராமிய விவசாய பொருளாதாரத்தை போன்று தோட்டப் பொருளாதாரத்துக்கு பாரிய ஒத்துழைப்பை வழங்கி, நிலையான அபிவிருத்தி செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் மூலம், விஷேடமாக தென் பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க பாரிய ஒத்துழைப்பு கிடைப்பதுடன், மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் அதிகமான கிராமங்களில் வாழும் பெரும்பாலான மக்களின் அடிப்படை வசதிகளை இனங்கண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கஷ்டப் பகுதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் சகல பிரதேச செயலகப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 3.4 2007 முதல் 2011 வரையான காலப்பகுதி

2007ம் ஆண்டின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தும் போது எமது பயணப் பாதை கஷ்டப் பகுதி அபிவிருத்தி என்ற எண்ணக்கருவுக்கு அப்பால் சென்று புதிய தொலைநோக்கின் கீழ் ஒன்றிணைக்க நேர்ந்தது. 2007ம் ஆண்டு முதல் மஹிந்த சிந்தனை தேசியக் கொள்கையில் இணைந்து ஜாதிகசவிய, கமநெகும அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் கிராமிய வாழ்வுக்கு உந்துதல் அளிக்கும் பொறுப்பு, இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டது. இதற்கமைய ஜாதிகசவிய, கமநெகும அபிவிருத்தித் திட்டங்களின் 03 தலைப்புக்களுக்கு அமைய அதாவது, பொருளாதார மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆன்மீக மற்றும் அபிவிருத்தி என்ற முக்கிய அடிப்படையில் இனங்காணப்பட்ட வேலைத்திட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மக்களின் எண்ணக்கருவாக தயாரிக்கப்பட்ட கிராமியத் திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன. மக்களின் பங்களிப்பை மையமாகக் கொண்ட எண்ணக்கருவைக் கருத்திற்கொண்டு, அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் முகமாக அவர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் (VDP) கீழ் செயற்பட்டமை இதன் விசேடத்துவமாகும்.

இதற்கமைய, ஜனாதிக சவிய - கமநெகும அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை ஆகிய 03 மாவட்டங்களிலும், ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் ஒன்று என்ற வகையில் 47 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. காலி மாவட்டத்தில் 18 கிராமங்களும், மாத்தறை மாவட்டத்தில் 12 கிராமங்களும், ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் 17 கிராமங்களும் இதில் அடங்கும். 2007 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களையும் உள்ளடக்கிய வகையில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் 150 கிராமங்களைத் தெரிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் அக்கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டன. அதற்கமைய 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான 03 வருட காலப்பகுதியில் ஜாதிகசவிய - கமநெகும அபிவிருத்தித் திட்டத்திற்கென சபையினால் செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 694 மில்லியன் ஆகும். அதன்மூலம் தெளிவாக சபையின் அடிப்படைக் கோட்பாடுகளை பாரியளவில் அடைந்து கொள்ள முடிந்துள்ளது.

இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் தொடர்பான தெளிவான விளக்கம் இந்த அறிக்கையின் மூலம் தெரிவிக்கப்படுவதுடன், 2012 ஆம் ஆண்டின் கடமைகள் தொடர்பான தெளிவான விளக்கங்கள் 04வது அத்தியாயத்தில் முன்வைக்கப்படும்.

**4. 2012 ஆம் ஆண்டின் செயற்றிட்டங்கள்**

2012 ஆம் ஆண்டில் தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் எல்லைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 150 கிராமங்களில் தற்போதைய அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டமான ‘திவிநெகும’ மற்றும் இதுவரை செயற்பட்ட ‘ஜாதிகசவிய - கமநெகும’ திட்டத்தை மேலும் முன்னோக்கி எடுத்துச்சென்று, அதற்கான வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. தற்போதைய அரசாங்கத்தின் புதிய தொலைநோக்கான வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தியின் மூலம் 2016 ஆம் ஆண்டளவில் சுபீட்சமான கிராமம் ஒன்றை உருவாக்கும் மாபெரும் செயற்பாட்டை யதார்த்தமாக்கும் பொறுப்பு சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்காக 2011 ஆம் ஆண்டில் பிரதானமாக ஐந்து வகையான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அதாவது, திவிநெகும வீட்டுப் பொருளாதார பிரிவுகளின் அபிவிருத்தி, திவிநெகும வலுவூட்டலுக்கான அடிப்படை வசதிகள் அபிவிருத்தி திட்டங்கள், ஜாதிகசவிய - கமநெகும குறைந்த வருமானம் பெறும் வீடுகளுக்கான வேலைத்திட்டம், வருமான வழிகளை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் மற்றும் ஐந்து வருட நிறுவனத்திற்குரிய வேலைத்திட்டம் என்பனவாகும்.

அதற்கமைய, 2011 ஆம் ஆண்டில் மொத்த அபிவிருத்தி இலக்குகளையும் அடைந்துகொள்ள ‘திவிநெகும’ வேலைத்திட்டம், ஜாதிகசவிய - கமநெகும தேசிய வேலைத்திட்டம் மற்றும் தலைமை அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்கான பணத்தைச் செலுத்துதல் உட்பட ஏனைய செலவுகளுக்கும் மத்திய திறைசேரியிலிருந்து ரூபா 300.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கமைய, தயாரிக்கப்பட்ட திட்டத்தின் ஆரம்ப கட்டமாக, ஜாதிகசவிய - கமநெகுமவுக்குரிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. ஆனால், பின்னர், அமைச்சின் ஆலோசனைக்கு அமைய, அதில் திவிநெகும புதிய தேசிய வேலைத்திட்டத்தையும் உள்ளடக்கி, ஆரம்பத் திட்டத்தை புனர்நிர்மாணம் செய்து முன்வைக்கப்பட்டதுடன், அது, அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், மத்திய திறைசேரியில் இருந்து 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நிதி கிடைக்கப்பெற ஆரம்பித்தது. இவ்வாறு சிறிதளவு தாமதித்து திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டமையும், நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றமையும் காரணமாக, இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட ரூபா 300.5 மில்லியன் பெறுமதியான அபிவிருத்தி வேலைத்திட்டத்தை செயற்படுத்துவது சபைக்கு மாபெரும் சவாலாக அமைந்தது. அதாவது, உரிய பிரதேசங்களில் குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பத்து இந்த வருடத்திலேயே பூர்த்தி செய்வதாகும்.

இவ்வாறானதொரு நிலைமையின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 300.5 மில்லியனில் இருந்து ரூபா 152.26 மில்லியன் செலவிடப்பட்டு வருட இறுதியளவில் 50.67மூ நிதி பெறுபவர்களையும், பௌதீக ரீதியில் 1,048 வேலைத்திட்டங்களில் 529 வேலைத் திட்டங்களை முழுமையாகப் பூர்த்தி செய்து 51மூ பௌதீக பெறுபேறுகளையும் பெற்றுக்கொள்ள முடிந்தமை சபை அடைந்துள்ள மாபெரும் வெற்றியாகும். இது தொடர்பான விபரங்களை பின்வரும் வரைபடம் எடுத்துக்காட்டுகின்றது.

**நிதித்துறை பெறுபேறுகளின் சாராம்சம் 2012.12.31**

| செயல் திட்டம் | | நிதி ஒதுக்கீடு ரூபா | நிதி பெறுமானம் ரூபா |
|---|---|---|---|
| 1. 'திவி நெகும் வேலைத்திட்டம்' | | | |
| 1.4 செலுத்த வேண்டிய திட்டங்கள் | | | |
| 1.1.1 | | 2,257,108.82 | 2,027,778.00 |
| 1.1.2 | | 13,466,312.76 | 11,820,318.74 |
| 1.1.3 | | 28,556,307.20 | 27,916,044.68 |
| உப மொத்தம் | | 44,289,728.78 | 41,764,141.42 |
| 2. வேறு திட்டங்கள் | | | |
| 2.1 | தெயட்ட கிருள தேசியக் கண்காட்சி | 525,000.00 | 418,200.00 |
| 2.2 | மூலதனச் சொத்துக்கள் சுவீகரித்தல் | 4,000,000.00 | 2,492,206.50 |
| 2.3 | உள்ளக ஊழியர் பயிற்சி | 500,000.00 | ---------------- |
| 2.4 | நிருவாக செலவினங்கள் (2%) | 685,271.22 | 630,196.08 |
| உப மொத்தம் | | 5,710,271.22 | 3,540,602.58 |
| மொத்தம் | | 50,000,000.00 | 45,304,744.00 |

குறிப்பு.

நிதி அமைச்சின் இல. 155 சுற்றுநிறுபத்தின் கீழ் செலவினங்களை முகாமைப்படுத்தல் (9%) மேல் வேறு தனிப்புள்ளிகளின் கீழ் மூலதன சொத்துக்கள் சுவீகரித்தல் மற்றும் உள்ளக ஊழியர் பயிற்சி போன்ற புள்ளிகள் ஊடாக முகாமைப்படுத்தப்பட்டது.

**மேற்குறிப்பட்ட விபரங்கள் கிழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது**

பெறுபேறுகளின் விருத்தி(திறைசேரி நிதியம் பெறல்)




2012 ஆண்டில் இரண்டாம் நிதி மூலமாகிய அமைச்சு பங்கீட்டின் கீழ் 22.5 மில்லியன் ரூபாவினை 2011 ஆண்டில் தொடரவேண்டிய திட்டங்களுக்காகவும், 91.8 மில்லியன் ரூபாவினை வீடமைப்பு திட்டத்திற்காகவும் அனுமதி பெற்றுத் தந்தது. தொடர வேண்டிய திட்டங்களுக்கான 22.5 பங்கீட்டின் 9.57 செலவு செய்யப்பட்டு ஆண்டு இறுதிகாலம் வரையில் 42.22% நிதி பெறுபேறு பெற்றுக்கொண்டு அவ்வினங் காணப்பட்ட திட்டங்களை முழுமையாக முடிவு செய்ய வசதி கிடைத்தது.

ஹம்பந்தொட்டை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்ளுக்காக 600 வீடுகள் கட்டும் செயல் திட்டம், அமைச்சின் பங்கீட்டின் கீழ் 2012 வருடத்தில் செயல் பட்டதோடு, 91.8 மில்லியன் ரூபாவை அகற்றி அதிலிருந்து 75.06 பணத்தொகை பெற்றுக்கொடுக்கப்பட்டது. இவ்வாறாக கிடைத்த 75.06 மில்லியன் ரூபாவிலிருந்து 75.04 செலவு செய்துக்கொண்டு, ஆண்டு முடிவுபெறும் பொழுது 81.74 மில்லியன் ரூபா பெறுபேறுகளும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 600 வீடுகளிலும் கூரைகளின் வேலைகளை முடித்து 85% பௌதீக பெறுபேறகளை பெற்றுக்கொண்டது. அமைச்சினால் வழங்கப்பட்ட பங்கீட்டின் கீழ் செயற்படுத்திய திட்டங்களில் நிதித்துறை பெறுபேறுகளை விளக்க வரைப்படத்தில் காணலாம்.

**2012. 12. 31 திகதியில் நிதித்துறை பெறுபேறுகளின் சுறுக்கம் (தொடர் மற்றும் வீட்டுத் திட்டம்)**

**அமைச்சின் நிதியம்**

| செயல் திட்டம் | பௌதீக இலக்குத் திடடம் | முடிவடைந்த திட்டங்கள் | பயனடைவேர் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு மி.ரூ | நிதிப் பெறுபேறு மி.ரூ |
|---|---|---|---|---|---|
| 1. திவி நெகும் செயல் திட்டம் | 318 | 252 | 5800 | 22,500,000.00 | 9,554,935.26 |
| வீடுகள் திட்டம் | (வீடுகள்) 400 | 396 | 400 | 91,800,000.00 | 75,044,809.20 |
| மொத்தம் | 718 | 648 | ---------- | 114,300,000.00 | 84,599,744.46 |

**நிதிப் பெறுபேறு (அமைச்சின் நிதியம் பெறுகை)**




**2012 வருடத்தில் மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி செயற்பாடுகளில் வேலைத் திறன் ஏழு பகுதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தியமை, அந்த பிரிவுப் விருத்தி கீழ் குறிப்பிட்டவாறு காணலாம்**

## 01. தொழில் பிரிவினால் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள்

2012 ஆண்டில் கைத்தொழில் பிரிவினால் 'திவிநெகும' செயற்திட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 கிராமசேவைப் பிரிவுகளில் வசிக்கும் பயனடைவோர் குடும்பங்ளுக்கிடையில் இருந்து பலவித தொழில் முயற்சியுள்ள அங்கத்தவர்களை தேர்ந்தெடுத்துக்கொண்டு அவர்களுடைய தொழில் முயற்சி திறன்கள் மற்றும் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும், அதன் ஊடாக அக்குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்தியையும் விருத்தி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- **தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழிற்நுட்ப பரிமாற்று செயல் திட்டங்கள்**

இதன் கீழ் தேர்ந்தெடுத்த 150 கிரமசேவைப் பிரிவுகளில் 2011 ஆம் ஆண்டிலிருந்து தெரிவு செய்துகொண்ட பயனடைவோர் முப்பது பேர்களுக்கான தொடரும் நிதி பங்கீட்டின் கீழ் 0.2 மில்லின் ரூபா செலவில் வியாபாரங்களுக்காக தேவைப்படும் உபகரணங்களை வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக 2011 ஆண்டில் 460 பயனடைவோருக்கு சிறு மட்டத்திலான வியாபார முகாமைத்துவம் பற்றிய செயற் திட்டங்கள் 08 நடாத்திருக்கின்றன. இதற்காக ஸ்ரீ லங்கா மத்திய வங்கி 16,000.00 ரூபாவினை செலவு செய்திருக்கின்றது. அதன்படி பார்க்கும் போது பயனடைவோர் குடும்பங்களில் வருடாந்த மொத்த வருமதானம் 3.8 மில்லியன் அளவில் வளர்ந்திருக்கிறது.





**காலி மாவட்டம் - கபரகல**
**(திரு. டப்.ஏ.அஜந்த வீரமுனி)**

**மாவட்டம் - தலஹிட்டியாவ**
**( திருமதி. ஏ.கே. கருணாவதீ)**

- **கிராமிய மக்களின் உணவு உற்பத்தி தொழில் முயற்சிகள் விருத்திச் செய்தல்**

இச் செயல்திட்டம் பிரக்டிகள் அக்ஷன் நிறுவனத்தோடு (Practica; Action Origanizaton) ஒன்றிணைந்து சார்க் நிதியன்தின் அனுசணையின் கீழ் செயல்படுத்துகின்றது. 2012 ஆண்டில் ஏற்றுமதிச் சந்தைக்கு பொருட்களை விற்பசைன் செய்வதற்கு 05 பயனடைவோருக்கு இடம் கொடுக்கப்பட்டதோடு, அதன் கீழ் அவர்கள் 75,000.00 ரூபா இலாபம் பெற்றிருக்கிறார்கள். 61 பேருக்கு திட்ட முகாமைத்துவம் பற்றிய செயல் திட்டஙகள் நடாத்தன் விளைவாக, அவாகளின் உற்பத்திச் செலவு பறிறிய அறிவு பெற்றுக்கொன்னல் மற்றும் முறையாக விலை நிர்ணயித்தல் செய்வதற்கும் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். மேலதிகமாக, தேசிய மற்றும் வெளிநாட்டு கேள்வி அதிகரித்திருக்கும் உணவு கேஷத்திரத்தில் சில் உற்பத்திப் பொருட்கள் பற்றிய விசேட தொழிற்நுட்பப் பயிற்சி 16பயனடைவோருக்கு பெற்றுக்கொடுத்ததோடு, அவ்வுற்பத்திக்களை சந்தைப்படுத்தலுக்கான வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. பிரக்டிகள் அக்ஷன் நிறுவனம் (Practica; Action Origanizaton) இதற்காக 600,000 மில்லயன் ரூபா பணத்தினை வழங்கியது.



**உணவு உற்பத்தி பயிற்சி**
**சபா நிறுவனம - ரத்மலானை**



**மாத்றை மாவட்டத்தில்- கம்புறுபிட்டியா**
**நடாத்தப்பட்ட பயிற்சி செயற் திட்டம்**

- **தென் பிரதேசத்தில் தும்பு பொருள் உற்பத்தி பிரிவு அபிவிருத்தி செயற் திட்டம்**

இச் செயற் திட்டம் அரச மற்றும் அவச சார்ப்பற்ற பல நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு தென் மாகாணத்தில் கீழ்க் காணும் செயல் திட்டங்களை செயல் படுத்தப்பட்து.

1. செயலிலிருக்கும் 30 தும்புத் தொழிட்சாலைகள் ஊக்குவித்து 2012 ஆம் வருடத்தில் தும்புத் தொழில் கண்காட்சியொன்றை நடாத்துதல்.
2. 48 தும்புத் தொழிற்சாலை உரிமையாளருக்கு தொழில்நுட்பரிவை பெற்றுக்கொடுத்தல், மற்றும் தேசிய மற்றும் வேளிநாட்டுச் சந்தையை பிடிப்பதற்கு அவகாசம் பெற்றுக்கொடுத்தல். இதற்காக 3000000 மில்லியன் ஒக்ஸ்பேம் நிறுவனம் வழங்கிளது. இதன்படி ஒரு தும்புத் தொழிற்சாலையின் மாதாந்த வருமானம் 5000.00 ரூபாவிலிருந்து 25000.00 ரூபாவாக அதிகரித்துள்ளது.



**2012 தென் பிரதேச தும்புத் தொழில் சனத் ஜயசூரியத் திடலில் கண்காட்சி கண்காட்சி**



**மாத்தறை மாவட்ட தும்புத் தொழிற்சாலை அப்பரெக்க- (லலித் கபில வீரசிங்ஹ)**

- **கிராமிய கைத்தொழில் வியாபாரங்களுக்காக நிதி வசதிகள் பெற்றுக்கொள்ளும் மற்றும் நிதி முகாமைத்துவம் பற்றிய அறிவுறுத்தல் பற்றிய செயல் திட்டம்.**

இவ்வதிகாரச் சபையின் இளகுவான செயல்முறையோடு ஸ்ரீ லங்கா மத்திய வங்கியினால் செயல்படுத்தும் இத்திட்டத்தின் கீழ்,மத்திய் வங்கி கீழ் தொழில் முயற்சியாளர்களுக்காக 8 செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, அதற்காக 70,000.00 ரூபாவினை செலவு செய்தது. இதன் கீழ் 269 பயனடைவோர்களை வியாபார முகாமைத்துவம் பற்றி அறிவு புகட்டுதல் 'குடிசையிலிருந்து புதிய உலகத்திற்கு' என்ற விசேட வேலைத்திட்டத்திற்கு சமமாக திதித்துறை அறிவாற்றல் பற்றி வீடு பெறுனர்களை அறிவூட்டும் மற்றும் கிராமிய வியாபாரங்களுக்காக வங்கி நிதிச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளல் பற்றிய அறிவும் புகட்டப்பட்டது. அதன்படி நிதிச்சலுகைகளை பெற்றுக்கொள்வதற்காக முன்வந்த 60 பயனடைவோர்களை வங்கிக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். தற்போது அவர்களுக்க நிதிச் சலுகை பெற்றுக்கொடுப்பதற்கான செயல்களை நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் மட்பாண்ட தெழிலில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தொழிலாளர்களுக்காக நாற்று மேடைப் பாவனைக்கான மட்பாண்டம் உற்பத்திற்காக 180,000 ரூபா பெறுமதியன ஒரு கடனை பெற்றுக்கொடுத்து தேசிய தினுசு நிறுவனத்தின் ஊடாக அவ்வுற்பத்திகளை கொள்வனவு செய்வதற்காக 300,000 மில்லியன் ரூபா பெறுமதியான கட்டளை கொடுத்திருக்கின்றது.



**ஹம்பந்தொட்டை மாவட்டத்தில் பதகஹகொடல்ல மண் பாண்டம் உற்பத்தி நிறுவனம்**



**ஸ்ரீ வங்கா மத்திய வங்கி திவி நெகும தொழில் கேட்போர் கூடம் - மாத்தறை முயற்சிக்கான நிதி சலுகைகள் பெற்றுக்கொடுத்தல்**

**தெயட்ட கிருள கண்ணகாட்சி - 2012**

பொருளாதார அமைச்சின் கண்காட்சி பிரிவின் திவிநெகும வீடுகளுக்கான பொருளாதார செயல் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தயாரிப்பாளரின் பொருட்களை காட்சிக்காக வைக்க அவகாசம் கொடுத்து. அவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு பிரவேசிப்பதற்கும், அவர்களுடைய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதற்கும் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதற்காக 'பிரக்டிகல் நிறுவனம்' 120,000 மில்லியன் ரூபாவினை வழங்கி நிதி அனுசரணை வழங்கியது.







## தெயட்ட கிருள கண்காட்சி - 2012

**அநுராதபுரம் ஒயாமடுவை வீட்டுக்கான உணவு தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்தல்**

### 02. உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவினால் செயற்படுத்திய அபிவிருத்தித் திட்டம்.

இதன் கீழ் 2011 ஆண்டில் ஆரம்பித்து முடிவுக்கு கொண்டுவரப்படாத சில் செயல் திட்டங்கள் 2012 ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்டன.

அதிலே, கிராமிய விவசாய திட்டங்களுக்கு பிரவேசிப்பதற்கு வசதிகள் அளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட 68 விவசாய செயற்பாடுகளில் எஞ்சியிருந்த செயல்களை முடிவு செய்ய 7,857,296.00 மில்லியன் ரூபாவும், விவசாய பயிர்களுக்காக நீரைப் பெற்றுக்கொடுக்கும் மேல்நிலை நீர்த்திட்டம் மற்றும் மூன்று அணைக்கட்டுகளின் அபிவருத்தி செயல்களை பூர்த்திச்செய்வதற்காக 205,404.24 மில்லியன் ரூபாவும், பிபில கஹட்டபிட்டியா சனசமூக நிலய கட்டடத்தை திருத்துவதற்காக 24.681.35 ரூபாவினையும் செலுத்தப்பட்டது.

மேலே குறிப்பிட்ட திட்டங்களுக்கு மேலதிகமாக, விவசாய மக்களின் உற்பத்திகளை விற்பனை செய்துகொள்ளவும் மற்றும் வியாபாரிகளுடைய கொள்வனவை மேம்படுத்தி அவர்களுக்கு கூடுதலான சருகைகைகளை செய்து கொடுப்பதை கருத்திற் கொண்டு, எம்பிளிபிட்டியா, கொளொன்ன, முல்லெடியாவல வாரச் சந்தை மற்றும் இமதூவ பிலானச் சந்தை நிலம் உள்ளடக்கிய கட்டட நிர்மான வேலைகளுக்காக 304593.60 செலவு செய்து பொது மக்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

நெலுவ கந்தகெட்டிய வெல்குலன கந்தகோசுவ நிர்மானம்







நெலுவ ஊரல கலேகொடவத்த லியனகெவத்த வீதி நிர்மாணம்



திருத்ததற்கு பின் வீதி



திருத்ததற்கு முன்னம் பீதி கழுவப்பட்டிருந்த விதம்

- **ஹம்பந்தொட்டை விசேட வீடமைப்புத் திட்டம். ‘குடிசையிலிருந்து புதிய உலகத்திற்கு’**

எமது அதிகார சபையால் ஹம்பந்தொட்டை மாவட்டத்தில் நடைமுறை படுத்திய விசேட வீடமைப்புத் திட்டத்தின் வெற்றிகரமான நிலைக்காக, 2011 வருட இறுதி வரையும், இம்மாவட்டத்திற்குள் வீடகளற்ற மற்றும் தற்காலிக குடிசைகளில் வசிக்கும் 7969 தனி குடும்பக்கூறுகளை இனங்கண்டு 2012 வருடத்தில் புதிதாக 600 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அங்கே பொருளாதார ரீதியில் பலவீனமான, வீட்டுடைமையானர் இல்லாத, உடல் நலம் மற்றும் மனநலக் குறைவான, கூடுதலான வயது குறைந்தோருள்ள, சொந்த வீடுகள் இல்லாத, மற்றும் மண்ணால் அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகளில் வசிக்கும், குடும்பங்களுக்காக அக்குடும்ப அங்கத்தவர்கள் பொருளாதர மற்றும் மானசீக ரீதியாக ஊக்குவித்து, கலந்துக்கொள்ளல் விருத்தியடையச் செய்யும் இவ்வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்த அவகாசம் கிடைத்தது.

அதன் கீழ் 600 வீடுகள் நிர்மாணிப்பதற்காக ஒரு வீட்டுக்கு 150,000.00 ரூபா.வீதம் பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. மொத்த மதிப்பீட்டுப் பணம் 91.8 ரூபாவாகும். அதன் பிரகாரம் 600 வீடுகளிலும் கூரை அமைத்தல் முடிவு செய்து, மேலான பௌதீக முன்னேற்றம் அடைவதற்கும், மற்றும் 75.04 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி பெறுபேறுகளை அடைய முடிந்தது. நிதி பெறுபேற்றின் சாராம்சம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| இ.ழ | பி.செயலர் பிரிவு | வீடுகள் | 2012 ஆண்டிற்கான ஒதுகப்பட்ட நிதி | 2012.12.31 திகதி நிதி பெறுபேறு | கூரை முடிவு | கூரை முடிவுபெற்ற வீடு முன்னேற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தரை கொன்கிறீட் | முடிவடைந்த கூரையுள்ளவற்றின் | கதவு நிலை பூட்டுதல் | யன்னல் சட்டம் பூட்டுதல் | யன்னல் மூடிகள் பூட்டுதல் | வெண்ணம் பூசுதல் |
| 1 | திஸ்ஸமஹாராமை | 42 | 6,300,000.00 | 4,996,000.00 | 42 | 38 | 22 | 29 | 29 | 10 | 10 |
| 2 | பெலியத்தை | 57 | 8,550,000.00 | 7,113,000.00 | 57 | 54 | 45 | 49 | 49 | 33 | 31 |
| 3 | வலஸ்முல்ல ஓகேவெல | 40 | 6,000,000.00 | 5,608,000.00 | 40 | 40 | 37 | 33 | 33 | 30 | 18 |
| 4 | கட்டுவன | 48 | 7,200,000.00 | 6,122,988.00 | 48 | 48 | 42 | 38 | 38 | 21 | 28 |
| 5 | லுனுகம்வெஹெர | 42 | 6,300,000.00 | 4,876,000.00 | 42 | 41 | 18 | 19 | 19 | 10 | 9 |
| 6 | சூரியவெவ | 58 | 8,700,000.00 | 6,640,000.00 | 58 | 52 | 41 | 50 | 50 | 22 | 21 |
| 7 | வலஸ்முல்ல | 49 | 7,350,000.00 | 5,867,000.00 | 49 | 45 | 35 | 32 | 32 | 15 | 15 |
| 8 | வீரகெட்டிய | 48 | 7,200,000.00 | 5,880,000.00 | 48 | 41 | 32 | 34 | 34 | 17 | 8 |
| 9 | அங்குனுகொலபெலெ | 50 | 7,500,000.00 | 6,846,000.00 | 50 | 49 | 33 | 46 | 46 | 26 | 18 |
| 10 | தங்காலை | 75 | 11,250,000.00 | 8,508,000.00 | 75 | 62 | 29 | 43 | 43 | 14 | 15 |
| 11 | அம்பலாந்தொட்டை | 36 | 5,400,000.00 | 4,398,000.00 | 36 | 34 | 17 | 24 | 24 | 9 | 7 |
| 12 | ஹம்பந்தொட்டை | 55 | 8,250,000.00 | 6,710,000.00 | 55 | 51 | 34 | 30 | 30 | 16 | 11 |
| | | **600** | **90,000,000.00** | **73,564,988.00** | **600** | **555** | **385** | **427** | **427** | **223** | **191** |








ஹம்பந்தொட்ட யஹன்கல ஊரின் டீ.எச். மஹிந்த அவர்களின் வீட்டில்

முன்னேற்ம்

**03. விவசாய மற்றும் கால்நடை வளப்புப் பிரிவினால் அமுலாக்கிய அபிவிருத்தித் திட்டங்கள்**

2011 வருடத்தில் அமுல் படுத்தி எஞ்சிய திட்டங்கள் 2012 வருடத்திற்குள் அமுல்படுத்தப்பட்டன. அதன் கீழ் பிரதானமாக விவசாய பயிர்களின் அபிவிருத்தி பணிகள் மற்றும் அவைச் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. மேலும், கால்நடை வளப் பிரிவின் அபிவிருத்தி செயல்கள் பற்றி கவனம் செலுத்தியது. அத்திட்டங்களின் சாராம்சம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- **விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தல்**

'திவிநெகும' திட்டத்தின் அதிவிசேட குறிக்கோளாகிய, உணவு பாதுகாப்பு மற்றும் குடும்பத்தின் வருமான அளவினை உயர்வடையச் செய்யும், 2011 வருடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்காக வாணிப விவசாய பண்ணை அமைத்தலின் எஞ்சியிருந்த செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவரப்பட்டன. அதில் விசேடமாக மரக்கறி மற்றும் பழ பயிர்கள் மற்றும் மிகைபடியான பயிர் வளர்ப்புப் பற்றி கவனம் செலுத்தி, 1502 பயனாளிகளுக்காக வேண்டிய மரக்கறி மற்றும் பழக்கள்றுகள், மற்றும் தேவையான விவசாய உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இதற்காக 1364440.00 மில்லியன் ரூபாவை செலவு செய்ததோடு பிரதிபலனாக பயனாளிகளின் வருமானம் 10 மில்லியன் ரூபாவினால் பெருக்க எதிர்ப்பார்க்கப்படுகிறது. அதேபோன்று தனிக்குடும்ப அலகுகளின் வருமானத்தை பெருக்கும் வகையில், தேனீவளர்ப்பு செயற் திட்டத்தின் கீழ் 44 பயனானிகளுக்காக தேனீ பெட்டிகள் மற்றும் ஏனை உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதற்ற மற்றும் காளான் வளர்ப்பு மற்றும் வீட்டுத்தோட்ட அபிவிருத்தி செயற்பாட்டின் கீழ் முறையாக 48 பயனாளிகளுக்காக மற்றும் 147 பேருக்கு வேண்டிய உபகரணங்கள், மூலப்பொருட்கள் மற்றும் அறிவுரைக் கட்டணத்திற்காக 585752.00 மில்லியன் ரூபாவினை செலவு செய்யப்பட்டது.

- **விதைகள் மற்றும் செடிகள் வழங்கும் பிரிவு**

இத்திட்டத்தின் குறிக்கோளாவது திவிநெகும் திட்டத்தின் கீழ் செயல்படும் குடியிருப்புக்களின் பயனடைவோருக்கு தேவைப்படும் நாற்று விதைகள் மற்றும் நாற்று கன்றுகள் உற்பத்திச் செய்தலாகும். இத்திட்டத்தின் கீழ் விதைகள், கன்றுகள் வழங்கும் 100 பிரிவுகள் அமைப்பதற்காக தேவைப்படும் மூல பொருட்களில் ஒரு பகுதி 2011 வருடத்தில் வழங்கப்பட்டதோடு, எஞ்சியத் தொகுதியாக 2012 ஆண்டில் 384490.00 மில்லியன் ரூபா பெறுமதியான பொலித்தீன், குழாய்கள் போன்ற உபகரணங்களை பெற்றுக்கொடுத்து எஞ்சிய பகுதியும் பூர்த்திச் செய்யப்பட்து. இதனூடாக பயனடைவோரின் மொத்த வருடாந்த வருமானம் 3.6 மில்லியன் ருரூபாவினால் அதிகரிக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

- **சிறு நாற்று மேடைகள், பாதுகாப்பான கொட்டில் மற்றும் கண்ணாடிச் செடிப் பண்ணை (Green house)**

இத்திட்டத்தின் கீழும் குடியிருப்புக்களுக்காக தேவைப்படும் ஒட்டுப் பழச்செடிகள், பூஞ்செடிகள் மற்றும் ஏனைப செடிகளின் உற்பத்திச் செயல் எதிர்ப்பார்பார்க்கின்ற அதே வேளை, 133 சிறு நாற்று மேடைகளுக்காக, பொலித்தின், குழாய்கள, போன்ற உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதற்காக 276425.00 மில்லியன் ரூபாவினை செலவு செய்யப்பட்டது. மேலும் 41 பாதுகாப்பான வீடுகள்/கண்ணாடிச் செடிப் பண்ணைகள் அமைப்பதற்காக தேவைப்படுகிற சட்டங்கள், பொலித்தின் மற்றும் வலைகள் போன்றவை உறிய பயநடைவோருக்குப் பெற்றுக்கொடுக்கின்ற அதே வேளை, அதற்காக 1256450.00 ரூபாவினை செலவு செய்துள்ளது. இதன் விளைவாக பயனடைவோரின் மொத்த வருடாந்த ஆதாயம் 6 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்குமென நம்பப்படுகிறது.



**திருமதி வாசனா பலங்கசிங்ஹ அவர்களின் திஹகொட பாலட்டுவ ஊரில**
**பாதுகாப்பு வீட்டினுள் ஏற்றுமதி அளவிளான அந்தூரியம் செய்கை**

- **கோழி இன, இனப்பெருக்கும் செயல் திட்டம்**

2011 வருடத்தில் இத்திட்டத்தின் கீழ் காலி, மாத்தறை, ஹம்பந்தொட்டை மற்றும் மொனராகல் ஆகிய நான்கு மாவட்டங்களில் பயனடைவோருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட இன பெருக்கு விலங்குகளுக்கான பணம் செலுத்தும் செயற்பாடுகள் 2012 ஆம் வருடத்தில் செய்ததோடு அதற்காக 607121.00 ரூபாவினை செலவு செய்யப்பட்டது.



**வெபலாகம நகர சபை கம்போஸ்ட் திட்டத்திற்கு அமைய அமைக்கப்பட்ட மேம்படுத்திய ஊர் கோழி வளர்க்கும் செயல்திட்டம்**

- **விவசாய மற்றும் கால்நடை இனபெருக்கு செயல் திட்டம்**

இச் செயற் திட்டத்தின் கீழ், மாட்டு மற்றும் ஆட்டு இனபெருக்குத் திட்டங்கள் முறையே 17 மற்றும் 06 க்காக 2369260 ரூபாவும், 191510 ரூபாவும் செலவு செய்ததோடு, அதனூடாக தற்போது வாழும் விலங்குகனின் மறபணு விருத்திசெய்தல் மற்றும் அதன் விளைவினால் கிடைக்கும் குட்டிகளை திவிநெகும குடியிருப்புக்களில் வசிக்கும் பயனடைவோருக்குப் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. இதனூடாக குறிப்பிட்ட பயனடைவோரின் வருடாந்த மொத்த வருமானம் 1.76 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.




**ஹம்பந்தொட்டை கொன்னோருவ குடியிருப்பில் ஹேமசந்திர ஜயவர்கன அவர்களின் மாடு வளர்க்கும் செயல் திட்டம்**

- **வீட்டுத் தோட்ட நிருவாக செயல் திட்டம்**

குடும்பத்தின் போஷாகருத் தன்மையை மேம்படுத்தவதற்காக இத்திட்டம் நடைமுறைக்கிடப்பட்டது. இதன் கீழ் ஒரு குடும்பத்திற்கு தேசிய ரீதியில் விருத்திச் செய்யப்பட்ட, ஒருமாத வயதுடைய 10 பெண்ணினக் கோழிக்குஞ்சுகள், 25 சதுர அடி விஸ்தீரமுள்ள ஒரு கோழிக் கூட்டை செய்துகொள்வதற்காக 3 கூரைத்தகடுகள் மற்றும் கோழிக் கூட்டுக்கான 25 சதுர அடி கம்பி வலைகள், வீதம் 462 பயனடைவோருக்கு வழங்கப்பட்டன. இத்திட்டத்திற்காக 1074825.00 ரூபாவினை செலவு செய்தது. இதற்கு மேலதிகமாக இரண்டு வீட்டு மாடுவளர்ப்பு திட்டங்களுக்காக 10430.00 ரூபாவினை செலவு செய்தது.

## ‘திவிநெகும’ வலுவூட்டலுக்கான உட்கட்டமைப்புச் வசதிகளை விருத்திச் செய்யும் திட்டங்கள்.

இத்திட்டத்தின் கீழ் விவசாய உற்பத்திகளோடு தொடர்ப்புடைய கிராமிய நீர்பாசனத் தொகுதிகளை நவீனமயப்படுத்தும் 45 செயல் திட்டங்கள் காலி, மாத்தறை, ஹம்பற்தொட்டை மற்றும் மொணராகல் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. அதற்காக செலவு 6294420.00 ரூபாவாகும்.

## 04. தோட்டப் பிரிவினால் அமுல்படுத்திய அபிவிருத்தித் திட்டங்கள்

தோட்டப் பிரிவினால் 2012 வருடத்தில் சார்ந்த நிறுவனங்களுடன் இணைப்பின் கீழ்க்காணும் திட்டங்கள் நடைமுறை படுத்தியதோடு அதற்கான சுறுக்கத்தை பின்வறுமாறு.

- **புதிய கறுவாத் தோட்டங்கள் புனர்நிர்மாணம் செய்யும் செயல் திட்டம்**

திவிநெகும் செயல் திட்டத்தின் கீழ் 2011 வருடத்தில் செயல் படுத்திய புதிதாக கருவா பயிரிடுதல் மற்றும் கறுவா போகம் புணருத்தானம் செய்யும் செயல் திட்டத்தின் ஊடாக, எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் வெளிநாட்டு செலாவணி ஈட்டுக்கொள்ளும் தேவையை பூர்த்திச்செய்வதற்கு தேவையான பின்னொக்குச் செயல்களை கடைபிடித்து பயனாளிகளைக் கொண்டு வெற்றிடச் செடிகளை நடுதல் மற்றும் பயிர்கள் கையாளுவதற்கான நடவடிக்கைகள்

இதற்கு மேலதிகமாக மாத்தறை மாவட்டத்தில் 110 பயனாளிகளுக்கு 327408.00 ரூபா பணத்தை செலவு செய்து கறுவா செடிகளை வழங்கி, காணிகள் சுத்திகரித்தல், செடிகள் நடுதல், பயிர்களை கையாளுதல் போன்ற கருமங்களை பயனாளிகளின் உழைப்பை பெற்றுக்கொண்டு கறுவா தோட்டங்களை புணருத்தானம் செய்ப்பட்டன. இதற்கான தொழில் நுட்ப ஆலோசனைகள் ஏற்றுமதி விவசாய திணைக்களம் வழங்கிளது. மற்றும் ஏற்ற கறுவாச் செடிகள் பெறுவதற்காகவும் ஆதரவு வழங்கியது. இச்செயல் திட்டத்தை ஆரம்பித்து 3 வருடங்களில் விவசாயிகளின் வருமானம் 0.5 - 2 மில்லியன் ரூபா வரை அதிகரித்துக்கொள்ள, அவர்களின் உற்பத்தியினை வெளிநாட்டு சந்தைக்கு அறிமுகமாக்கி வெளிநாட்டு செலாவனி ஈட்டிக்கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகிறது.

- **பயிர் செய்கைகள், அண்டிய கிராமிய வீதிகள் அபிவிருத்திச் செயல் திட்டம்.**

2012 வருடத்தில் காலி மாவட்டத்தில் 564178.00 ரூபா செலவளித்து, 40 குடும்பங்களுக்கு பயனளித்து நெலுவ - மாவிட்ட மேற்கு கந்தெகெட்டிய நிர் பாய்ச்சுப் (சறு ) பாலம் கட்டப்பட்டது.

மேலதிகமாக, காலி, ஹம்பந்தொட்டை மற்றும் மொனராகல் மாவட்டங்களில் 2011 வருடத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட 14 வீதிகளில் பெயர் கலகைக்கான மற்றம் தடுத்து வைப்புப் மணமாக 832971.89 செலுத்தியிருக்கிறது.

தோட்டப் பிரிவினால் அமுல் படுத்தி நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்களினால் 2012 வருடத்தில் கிடைக்கப்பெற்ற வருமானம்.

- **தோட்டப் பிரிவினால் சென்ற காலத்தில் அமுலாக்கிய பினவரும் திட்டங்களினால் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் வருமானங்கள்**

| திட்டத்தின் பெயர் | தேயிலை தொழிற்சாலைகளினால் பெற்ற வருமானம்(அரச வறிகள் உற்பட) | 100% |
|---|---|---|
| கலகாவ தேயிலை தொழிற்சாலை | 544,603.90 | 29.5% |
| ஜெஸமின் வெளி தேயிலைத் தொழிற்சாலை | 675,883.20 | 36.6% |
| பனில்கந்த தேயிலை தொழிற்சாலை | 626,000.00 | 33.9% |
| | 1,846,487.10 | 100% |

**பெற்றுக்கொள்ளப்பட்டன.**

## 05. மனித வள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவினால் அமுலாக்கிய அபிவிருத்தித் திட்டங்கள்

2012 வருடத்தில் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிப்பதற்காக பயிற்சிப் பிரிவிற்கு மூலதன ( ) கிடைக்கவில்லை. ஆயினும் மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2012 வருடத்தில் பினவரும் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் அமுலாக்கப்பட்டன.

- **கடந்த வருடங்களில் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்ட திவிநெகும செயற்பாட்டுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட இயன்மைக்கூறுத் தொகுதியை பராமரித்தல்**

  2011 வருடத்தில் ஆரம்பித்து முடிவு செய்யப்படாத திட்டங்கள் திரட்டிய மற்றும் பிரிக்கப்படாத திட்டங்களின் கீழ் ஏனைய பிரிவுகளினால் 2012 ஆம் வருடத்தில் நடைமுறைச் செய்யப்பட்டன. இதன் கீழ் காலி, மாத்தறை, ஹம்பந்தொட்டை, மொனராகல் மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்ட, எமது அதிகார சபையால் விருத்திச் செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் 150 குடியிருப்புக்களில் வசிக்கும் கிராமிய பயனாளி குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பெறுபேறுகள் மற்றும் கிராமிய குடும்பங்களின் தகவல்களை இயன்மைக் கூறுத்தொகுதிக்கு உள்ளடக்கி எதிர்காலத்தில் பராமரிக்கும் செயல்கள் 2012 ஆண்டில் செய்யப்பட்டன.

- **அத்துறலிய தலஹகம தொழிற்பயிற்சி நிறுவனத்தை மேலும் பராமரித்தல் எமது**

அதிகார சபையும் ஸ்ரீ லங்கா தொழிற்பயிற்சி அதிகார சபை ஒன்றாக, 2007 ஆம் வருடத்தில் இருந்து இதுவரைய நடாத்தப்பட்டுவரும் தொழிற்பயிற்சி நிருவனத்தில் பாடநெறிகளை கற்றல் நடவடிக்கைகளுக்காக மாணவர்களை இனங்காண்பதற்கும் மற்றும் இடைக்கிடையில் அவர்களின் பயிற்சி நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றிய சோதனைகளும் 2012 ஆண்டில் கடடைப்பிடித்தது.



**அத்துரலரிய தொழில் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிப் பெரும் மாணவர்கள்**

- **சார்ந்த நிறுவனங்களுடன் இணைந்து தொழில் முயற்சி செயற்திட்டங்கள் செயல்படுத்துவதற்காக, அவ்வாறான நிறுவனங்களை அறிவூட்டுதல்**

இத்திட்டத்தின் கீழ் ஹம்பந்தோட்டை தொறில் முயற்சி செயல் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும், அரச மற்றும் தனியார் துறையின் பல நிறுவனங்களோடு ஒள்றிணைந்து அமைக்கப்பட்டிருக்கும் ஹம்பற்தோட்டை மாவட்ட தொழில் பயிற்சி ஒன்றியத்தின் ஊடாக ஒன்றிணைந்து மாவட்டத்தினுள் பலவித தொழில் பயிற்சி நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன.

## 06. காணிப் பிரிவினால் செயல்படுத்திய அபிவிருத்தி செயல் திட்டங்கள்.

ஸ்ரீ லங்கா தெற்கு அபிவிருத்தி அதிகாரச சபைச் சட்டத்தின் முக்கிய குறிக்கோளான, உற்பத்தித்திறன் மேம்படுத்தல், வருமான உற்பத்தி, மற்றும் தொழில்வாய்ப்பு உற்பத்தி போனறபற்றுக்கு முதலிடம் கொடுத்து, காணிப்பிரிவினால் பல திட்டங்களை அமைத்திருக்கின்றன. மாத்தழற மாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஒலியகொடவத்த மின்னாக்கி நிலையம், இசுறு செரமிக், தங்கொலுவவத்த கறுங்கல் திட்டம், ரடலங்காவத்த ட்ரகன்ப்றுட் (Dragon fruit) மற்றும் டயர் மீள் நிர்மானத் தொழிற்சாலை ஆகிய செயல் திட்டங்கள் ஊடாக ஸ்ரீ லங்கா தெற்கு அபிவிருத்தி அதிகார சபை 2012 ஆம் ஆண்டில் 1599266 ரூபா பணத்தை ஈட்டிக்கொண்டது. இத்திட்டங்கள் ஊடாக 94 நேர் தொழில் வாய்ப்புக்கள் உறபத்தி செய்திருக்கின்றது. மேலும் 378 பேருக்கு வாழ்வாதார வசதிகள் கிட்டிருக்கிறது.

மேலும் எம்பிளிப்பிட்டியா தொழிற்பேட்டையின் 09 கட்டடங்களில் ஒரு கட்டடத்தைத் தவிர ஏனைய எல்லா கட்டடங்களையும் 2012 வருடத்தில் குத்தகை அடிப்படையில், முதலீட்டாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டன. அதிலிருந்து 355543 ரூபாவினை வருமானமாக ஈட்டிககொடதுடன், இத்திட்டங்கள் காரணமாக 236 நேர்முக தொழில் வாய்ப்புக்களை உற்பத்திசெய்திருக்கிறது. 2011 ஆண்டில் இத்தொறிற் பேட்டையின் 149 பேர் தொழிலில் ஈடுபட்டதோடு, இவ்வருடத்தில் அவ்வெண்ணிகை 87 க அதிகரித்துள்ளது.

மொனராகல் புத்தலையில், ‘சேவரி லங்கா’ பெயரில் ஒரு யோகட் உற்பத்தி திட்டமொன்று நடாத்திக்கொண்டிருக்கிறது. அதனூடாக 15 தொழில் வாய்ப்புக்கள் உண்டாகியிருக்கின்றன. அதனூடாக ஸ்ரீ லங்கா தெற்கு அபிவிருத்தி 39600.00 ரூபாவினை வறி வருமானமாக ஈட்டிக்கொண்டது. இதன் பிரகாரம் 2013 ஆம் வருடத்தில் காணிப்பிரிவினால் பெற்ற மொத்த வருமானம் 2485888.91 ரூபாவாகும்.

மேலும் பல வருட காலமாக செலுத்தப்படாமல இருந்த முற்பணங்களின் 675000.00 ரூபாவினை மீண்டும் சபையிடம் பெற்றுக்கொள்ள அவகாம் கிடைத்தது. இதற்கு மேலதிகமாக சுவீகரிப்பதற்கு ஆயத்தப்படுத்திய சில காணிகள் பணிப்பாளர் சபையின் அனுமியோடு, சுவீதரித்தலை ரத்துச் செய்யதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதே போன்று, தமாடுவ, ஓகேவெல பாடசாலை கட்டடத்தை ஸ்ரீ லங்கா தெற்கு அபிவிருத்தி சபைக்காக சுவீகரிப்பற்கு நடவடிக்கைகள் எடுத்தல், புத்தலை தொழிற்பேட்டையின் கட்டடங்களை விற்பனைக்காக தேவையான ஆரம்ப செயல்களை செய்தல், கதுறுதூவவத்த காணியை முதலீட்டு செயற்பாடுகளுக்காக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல், போன்ற பல நடவடிக்கைகள் காணிப்பிரிவினால் 2012 வருடத்தில் பூர்த்திச் செய்யப்பட்டன.

## 07. மின்பிடிப் பிரிவினால் செயல்படுத்திய அபிவிருத்தித் திட்டங்கள்.

**2012** வருடத்தில் மீன்பிடி மற்றும் அதற்கு இணைவான ஏனைய திட்டங்கள் செயல்படுத்துவதற்காக ප්‍රතිපාදන වෙන්නොවීයග அதற்கேற்ப 2012 ஆம் ஆண்டில் செயற்படுத்தியவை 2011 ஆண்டில் செயற்படுத்துவதற்கு இயலாமல் எஞ்சியிருந்த, இரு திட்டம் மாத்திரமே.

அதன்படி காலி மாவட்டத்தின் பிட்டிகல, எல்பிட்டிய மற்றும் பான்வெல்கொடெல்ல பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுத்த மூன்று பயனாளிகளுக்காக அவர்களாலேயே ஆயத்தப்படுத்தப்பட்ட சிறு நீர்நிலைக்காக, 4500 இக்கு அதிகமான ‘காப்’ இன மீன் குஞ்சுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இம்மீன் குஞ்சுகளுக்காக 6925.00 செலவளிக்கப்பட்டது.

அதேபோல் பொருளாதார அமைச்சின் நிதி வழங்களின் கீழ் மீன்பிடி, மற்றும் நீரியல் வள அமைச்சின் நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக மக்களின் போஷாக்கு மட்டத்தை உயர்வடையச் செய்ய மற்றும் மேலதிக வருமானம் ஈட்டுதலை அடிப்படையாகக் கொண்டு. பல மீன்பிடித் திட்டங்கள் சிலவற்றை செயல்படுத்தப்பட்டதோடு, அதற்கேற்ற பயனாளிகளை மாவட்ட ரீதியில் தேர்ந்தெடுத்து, உரிய திட்டங்ளுக்காக தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் சமர்ப்பித்தலும், அமைச்சின் ஆலோசனைகள் பிரகாரம் ஸ்ரீ லங்கா தென் அபிவிருத்தி அதிகார சபையின் மீன்பிடிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.



**பொத்தன மெதேரிபிட்டியா குடியிருப்பில் சிறப்பாக மின் வளர்க்கும் ஒரு குளம் (செயர்க்கை)**



**எல்பிட்டியா கஹதூவ குடியிருப்பில் மூடு வலையிட்ட செய்யப்பட்ட செயர்க்கை குளம்**

தலைவர்,
இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை

**இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 18 ஆம் இலக்க இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை 2013 மே 17 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**1.5 அதிகாரசபை நிலைத்திருத்தல்**

2013 சனவரி 08 ஆந் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 01 ஆம் இலக்க திவிநெகும திணைக்கள அதிகாரச்சட்டத்தின் மூலம் இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையினை உள்ளடக்கி 05 அரசாங்க நிறுவனங்களை ஒன்றிணைத்து திவிநெகும திணைக்களம் என்ற பெயரில் புதிய திணைக்களம் தோற்றுவிக்கப்படுவதாக மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2013 சனவரி 08 ஆந் திகதியிலிருந்து இந்த அதிகாரசபை தொடர்ந்தும் இயங்காததனால் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் இருக்கவில்லை என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

அதனது நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தகப்பெறுமதி பூச்சியமாக உள்ள மோட்டார் வாகனம், இயந்திரம் முதலிய நிலையான சொத்துக்களை மீள் பெறுமதியிட்டு மீண்டும் கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1999 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய பிரதான மதிப்பீட்டாளரின் கடிதத்தின் பிரகாரம் தேயிலை தொழிற்சாலையுடனான காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,500,000 ஆக இருந்தது. நிதிக்கூற்றுக்களில் அக்காணியின் பெறுமதி ரூபா 1,400,000 இனால் குறைத்து ரூபா 100,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது. இழப்பீட்டு மதிப்பீட்டுப் பெறுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் 02 ஏக்கர் அளவான காணித்துண்டு ட்ரேகன் பூட் செயற்திட்டத்திற்கு 2009 ஆகஸ்ட் 20 ஆந் திகதி குத்தகை உடன்படிக்கை மூலம் வெளி நபர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. துறைரீதியான முகாமையாளரின் (காணி) 2008 திசெம்பர் 08 ஆந் திகதிய கடிதத்தில் ட்ரேகள் பூட் பயிர்ச்செய்கைக்காக ஒதுக்கப்பட்ட 300 பேச்சர்ஸ் அளவான காணியின் பெறுமதி பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகரம் ரூபா 1,800,000 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் நிதிக்கூற்றுக்களில் காணியினைப் பெற்றுக்கொள்வதற்கு செலவுசெய்யப்பட்ட ரூபா 250,000 மாத்திரம் காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா 1,550,000 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் அட்டுறுச் செலவுகளாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,959,614 காட்டப்பட்டிருந்தும் அத்திகதியில் உள்ளவாறான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அட்டுறுச் செலவு ரூபா 5,015,174 ஆக இருந்ததனால் ரூபா 1,944,440 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனங்கள் மற்றும் 8 நபர்களிடமிருந்து 2 ஆண்டுகளிலிருந்து 13 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குள் பெறவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 221,183 தொகை முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் 13 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,258,554 கடன் தொகையும் வேறு 06 நிறுவனங்களுக்கு 12 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 134,656 தொகையான கடன்களையும் முற்பணங்களையும் மீள அறவிடுவதற்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு செயற்திட்டங்களுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் 12 ஆண்டுகளுக்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,301,601 தொகையை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் மீள அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட ரூபா 2,252,039 பெறுமதியான செலுத்தவேண்டிய 16 மீதிகளுக்காக மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக அம்மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்யமுடியாதிருந்தது.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் 371(2) இற்கு முரணாக 1999 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டின் இறுதிவரை வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட்ட ரூபா 14,654,793 தொகையான குறித்த நோக்கத்திற்கான உப கட்டுநிதி 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளய்வாண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாடுகள் ரூபா 24,710,364 தொகையான பற்றாக்குறையை விளைவித்துள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 26,406,383 ஆக இருந்ததனால் நிதி விளைவுகளில் ரூபா 1,696,019 தொகையான முன்னேற்றத்தினை சுட்டிக்காட்டியுள்ளது. மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் உதவிப் பெறுவனவுகள் ரூபா 1,355,000 ஆல் அதிகரித்தல் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 1,745,548 ஆல் குறைவடைதல் நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 அதிகாரசபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டச் சம்பவங்கள்

ஒரு வெளி நிறுவனத்தினால் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக ரூபா 158 மில்லியன் இழப்பீடு கோரி அதிகாரசபைக்கும் ஏனைய 2 அரசாங்க நிறுவனங்களுக்கும் எதிராக கொழும்பு வணிக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

### 4.1 செயலாற்றல்

-----------------

(அ) 2012 யூலை 10 ஆந் திகதிய 2/2012 ஆம் இலக்க திவிநெகும சுற்றுநிருபத்தின் பிரகாரம் புதிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது எதுவித செயற்திட்டமும் காலி, மாத்தறை மற்றும் மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் 2011 ஆம் ஆண்டின் போது தொடரப்பட்ட செயற்திட்டங்களில் ஒரு பகுதி மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 7,897,245 பெறுமதியான 69 செயற்திட்டங்கள் 2012 திசெம்பர் 31 அளவில் முழுமையாகக் கைவிடப்பட்டிருந்தன.

(இ) தொடர்ச்சியான வேலைகளின் திரண்ட செலவுகள் ரூபா 39,150,079 ஆக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருநத போதிலும் அந்த மதிப்பீடு ரூபா 16,426,281 ஆக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 2012 மார்ச் 14 ஆந் திகதிய கடிதத்தால் திருத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 22,723,798 தொகையான திரண்ட செலவுகளைக் கொண்ட தொடர்ச்சியான வேலைகளைப் பூர்த்திசெய்த முறைமை தெளிவற்றதாகக் காணப்பட்டது.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் பதவியணியினருக்கு 2011 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்த செயற்பாடுகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஒட்டுமொத்த பதவியணியினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம், பிரயாணச் செலவுகள் மேலதிகநேர வேலை, எரிபொருள் என்பவற்றிற்காக ரூபா 108,785,898 தொகை 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

------------------------------------------

#### 4.2.1 வெளிநாடு சென்ற ஒரு உத்தியோகத்தருக்கு சம்பளம் செலுத்துதல்

------------------------------------------------------------------------------------------

1998 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து அதிகாரசபையின் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளராகச் சேவையாற்றிய ஒரு உத்தியோகத்தருக்கு 2005 பெப்ரவரி 28 ஆந் திகதியிலிருந்து 2006 யூலை 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக தனது தனிப்பட்ட செலவில் வர்த்தக பட்டப்பின் படிப்பினைத் தொடர்வதற்காக வெளிநாடு செல்வதற்கு சம்பளத்துடனான விடுமுறை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 மார்ச் 01 ஆந் திகதி அதிகாரசபை அந்த உத்தியோகத்தருடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 பெப்ரவரி 28 ஆந் திகதியிலிருந்து 2006 யூலை 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக அந்த உத்தியோகத்தருக்கு வெளிநாடு செல்வதற்கு சம்பளத்துடனான விடுமுறையானது தாபனவிதிக் கோவையின் XIV ஆம்

அத்தியாயத்தின் 14.1.1 இலிருந்து 14.1.5 வரையான பிரிவுகளுக்கு முரணாக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒரு உத்தியோகத்தருக்கு முழுச்சம்பளத்துடனான விடுமுறை வழங்கும் போது திறைசேரிச் செயலாளரின் 2003 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய எம்எப்/6/1/2/03 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்காததுடன் பொது நிருவாக அமைச்சுச் செயலாளரின் 1997 நவம்பர் 28 ஆந் திகதிய 24/97 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும் உடன்படிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒரு பெண் உத்தியோகத்தருக்கு சம்பளத்துடனான கல்வி விடுமுறைக்காலம் 2006 யூலை 31 ஆந் திகதி பூர்த்தியடைந்திருந்தும் அத்திகதியினை 2007 யூலை 31 என பிழையாக மாற்றி ரூபா 270,934 சம்பளமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தலைவரினால் 2007 யூலை 26, 2008 யூலை 22 மற்றும் 2009 மார்ச் 19 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் 2007 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து 2009 யூலை 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக சம்பளத்துடனான விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2007 செப்தெம்பர் 21 ஆந் திகதிய 21/2007 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தினால் திருத்தப்பட்ட தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தரின் வெளிநாடு சென்ற விடுமுறைக் காலத்தை நீடிப்பதற்கு வேண்டுகோள் விடுப்பதாக இருப்பின் அதற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான எவ்வித காரணமும் இல்லாது அந்த உத்தியோகத்தரின் வெளிநாடு சென்ற விடுமுறைக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெண் உத்தியோகத்தரிடமிருந்து 2013 யூலை 02 ஆந் திகதியளவில் ரூபா 1,002,928 தொகை அதிகாரசபையினால் அறவிட வேண்டி இருந்ததுடன் மோசடியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு பணத்தைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக 1982 இன் 12 ஆம் இலக்க அரசாங்க ஆதனங்கள் மீது செய்யப்படுகின்ற பிழைகள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் கீழ் இப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது உடன்படிக்கையில் மீறல் இடம்பெற்றுள்ளதாகக் கருதி மாத்தறை பொலிஸ் நிலையத்தில் 2012 ஒக்தோபர் 23 ஆந் திகதி (4)32/33 ஆம் இலக்க முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 4.2.2 அதிகாரசபை காணிகளைப் பொறுப்பேற்றலும் குத்தகைக்கு வழங்கலும்

---

(அ) அதிகாரசபையினால் பொறுப்பேற்ற காணிகள் தொடர்பாகச் செய்யப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரசபையின் முன்னாள் தலைவரால் 1997 ஆகஸ்ட் 08 ஆந் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சினதும் விவசாய மற்றும் காணிகள் அமைச்சினதும் செயலாளர்களுக்கு விலாசமிடப்பட்ட கடிதத்தின் மூலம் காணிகளைப் பொறுப்பேற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாவது தனியார் துறையின்

ஒத்துழைப்புடன் ஒன்றித்த செயற்திட்டங்களை ஆரம்பிப்பது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் 1998 ஆம் ஆண்டின் போது அதிகார சபையினை மீளமைப்புச் செய்வதனால் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட 08 காணிகளும் 06 கட்டிடங்களும் தனியார் துறைக்கு குத்தகைக்கு வழங்குதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

(ii) காணிகளைச் சுவீகரித்தலைத் தெரியப்படுத்துதல் மற்றும் காணிகளைப் பொறுப்பேற்றலுக்காக வர்த்தமானியின் மூலம் அறிவித்து பொறுப்பேற்கும் நடவடிக்கை பூர்த்திசெய்யப்படும் வரை பொருத்தமான ஏடுகளையும் கோவைகளையும் பேணாமையின் பொருத்தமான ஏடுகளையும் கோவைகளையும் பேணாமையின் காரணமாக சுவீகரித்த காணிகளின் நிகழ்கால நிலைமை தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2001 செப்தெம்பர் 05 ஆந் திகதி கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கை சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அதிகாரசபை அந்த ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகைதாரரின் வேண்டுகோளின் அடிப்படையில் அதிகாரசபைக்குச் சாதகமற்ற வகையில் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. குத்தகைதாரருக்கு குத்தகை ஆதனங்களை பிணையாக வைத்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் கடனை மீளச் செலுத்தாமையினால் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரசபை இழப்பீடு செலுத்தி சுவீகரித்த ஆதனங்களும் 02 ஆண்டுகளின் போது குத்தகைதாரருக்கு உரித்தாகும் வகையில் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) குத்தகை உடன்படிக்கையின் 7 ஆவது நிபந்தனையின் பிரகாரம் குத்தகைதாரரினால் பொருத்தப்படும் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட பெறுமதியான இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன தொடர்பாக பொருத்திய திகதியிருந்து 30 நாட்களுக்குள் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் பொருத்தப்பட்ட ரூபா 101,776,557 பெறுமதியான இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன தொடர்பாக அதிகாரசபைக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. குத்தகை உடன்படிக்கையின் 5 ஆவது நிபந்தனைக்கு முரணாக அதிகாரசபையின் எழுத்து மூல உத்தரவு இன்றி ரூபா 55,486,250 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என 2013 மார்ச் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டன.

**4.2.3 திவிநெகும செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் பலவீனங்கள்**

--------------------------------------------------------------------------------

இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் 2012 ஆம் ஆண்டின் போது திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய 04 மாவட்டங்களில் பசுமாடு, ஆடு, கோழிக்குஞ்சுகளை வழங்குதல் மற்றும் பசு இனவிருத்தி நிலையத்தினைத் தோற்றுவிப்பதற்காக ரூபா 5,238,702 செலவு

செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாத்தறை மாவட்டத்தில் கோழிக் குஞ்சுகளை வழங்குதல் மற்றும் கோழி இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 987,611 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் திஹகொட பிரதேசத்தில் இரண்டு நலன்பெறுனர்களுக்கு 300 கோழிக்குஞ்சுகள் வளர்ப்பதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 மார்ச் 07 ஆந் திகதி பௌதீக ஆய்வுச் சந்தர்ப்பத்தில் அந்த இரண்டு நலன் பெறுனர்களும் செயற்திட்டத்தினைக் கைவிட்டிருந்தனர்.

(ஆ) காலி மாவட்டத்தில் யக்கலமுல்ல பிரதேச செயலகப் பிரிவில் 08 நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 80 கோழிக் குஞ்சுகளில் 60 கோழிக்குஞ்சுகளும் அம்பலன்கொட பிரதேச செயலகப் பிரிவில் 13 நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 130 கோழிக் குஞ்சுகளில் 81 கோழிக் குஞ்சுகளும் இறந்து போயிருந்தன.

**4.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

-----------------------------------------------------

**4.3.1 அக்மீமன போகஹகொட சந்தைக் காணியினைத் தயாரித்தல் மற்றும் கடைகளுடன் போசன சாலைகளை நிர்மாணித்தல்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------

அதிகாரசபையினால் மேற்கூறிய நிர்மாணங்களுக்காக ரூபா 4,619,475 பெறுமதியான 04 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 2010 திசெம்பர் மற்றும் 2011 ஆகஸ்ட் மாதங்களில் 04 ஒப்பந்தக்கார சங்கங்களுடன் ரூபா 4,619,475 பெறுமதியான 4 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ரூபா 4,111,068 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டத்தின் மூலம் மேலே குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 2010 நவம்பர் 11 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டில் செலுத்தப்படாது எஞ்சியிருந்த நிறுத்தி வைத்தல் பணம் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த ஆண்டிலேயே வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 2011 ஆம் ஆண்டில் தொடரப்படாத இச்செயற்திட்டத்திற்காக தொடரப்பட்ட திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இரண்டு செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு ரூபா 439,603 தொகை இச்செயற்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஒக்டோபர் 10 ஆந் திகதி அக்மீமன பிரதேச சபைக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின்றி வேலை பூர்த்திசெய்யப்பட்டு மேற்கூறிய செயற்திட்டம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2013 மார்ச் 21 ஆந் திகதிய பௌதீக ஆய்வுச் சந்தர்ப்பம் வரையும் அச்செயற்திட்டம் எதிர்பார்த்த பொதுமக்கள் நலனுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிகாரசபை முறையான

திட்டமின்றி செலவு செய்த ரூபா 4,111,068 தொகையான செலவு விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) அக்மீமன பிரதேச சபைக்குச் சொந்தமான இக்காணியில் அதிகார சபையினால் 2010 திசெம்பர் மாதத்தில் வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதாவது 2010 ஏப்ரல் 20 ஆந் திகதி பிரதேச சபையினாலும் மண்வெட்டுவதற்கும் அத்திவாரம் இடுவதற்கும் ரூபா 1,583,754 செலவு செய்யப்பட்டிருந்தது. நிறுவனங்களுக்கிடையே சிறந்த தொடர்புகளை ஏற்படுத்தாமை இதற்கு காரணமாக இருந்தது.

**4.3.2 கடபோத்துவ விவசாய அணைகளை அபிவிருத்தி செய்தல்**

---------------------------------------------------------------------------

2011 ஆம் ஆண்டில் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாலடுவ, கடபோத்துவ விவசாய அணைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக அதிகாரசபை 2011 பெப்ரவரி 11 ஆந் திகதி சமூர்த்திச் சங்கத்துடன் ரூபா 299,710 பெறுமதியான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ரூபா 293,710 தொகை செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டம் தொடர்பான சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் பயிர்செய்வதற்கு இலக்கிடப்பட்ட 40 ஏக்கர் வயல்களை பயிரிடப்படாமை 2013 மார்ச் 06 ஆந் திகதிய பௌதீக ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.3.3 கடவரயாய கால்வாயின் தெற்கு கரைக்கு மண் அணையிடலும் கொடவில தெற்கு கிங்கஸ்வில கால்வாயின் இடது கரை அணை நிர்மாணித்தல்.**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

வயல்களில் சேரும் நீர் வடிந்தோடுவதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அதிகாரசபையின் மாத்தறை மாவட்ட அலுவலக்தின் கீழ் வெலிகம பிரதேச செயலகப் பிரிவில் இந்த நிர்மாணத்திற்காக 2011 திசெம்பர் மாதத்தின் போது முறையே ரூபா 252,200 மற்றும் ரூபா 491,941 பெறுமதியான 02 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு ரூபா 672,080 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இந்த இரண்டு செயற்திட்டங்களுக்காக இரண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திட்டப்பட்டிருந்தன. அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரே நீர்ப்பாசனக் கால்வாய் தெற்கு கரையின் ஒரு பகுதி மாத்திரமே என 2013 மார்ச் 07 ஆந் திகதிய பௌதீக ஆய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டதுடன் வெலிகம பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தராலும் அதுபற்றி உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இந்த இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பான சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் 25 ஆண்டுகள் கைவிடப்பட்டுக் காணப்பட்ட 90 ஏக்கர்கள் அளவான காணியில் பயிர்செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. வயல்களில் சேரும் நீர் வழிந்தோடுவதற்கு கால்வாய் தயார்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும் இடது கரைக்கு மண் போட்டு அபிவிருத்தி செய்யாமையும் வலது கரையில் 180 மீற்றர் நீளமான ஒரு பகுதியினை அபிவிருத்தி செய்யாமையும்

காரணமாக நீர் வழிந்தோடாமையின் காரணமாக மேற்கூறிய இலக்கினை அடைந்து கொள்ள முடியாதிருந்ததனால் அதிகாரசபை செலவு செய்த ரூபா 672,080 தொகை விளைவற்ற செலவாகக் காணப்பட்டது.

### 4.3.4 செயற்திட்டங்களைக் கைவிடல்

2011 ஆம் ஆண்டின் போது 04 சங்கங்களுடன் கைச்சாத்திடப்பட்ட 04 வீதிகளின் நிர்மாணம் சம்பந்தமாக ரூபா 2,032,898 பெறுமதியான உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட வேலைகள் நிறைவேற்றப்படாது அவை முழுமையாக கைவிடப்பட்டிருந்தன.

### 4.3.5 தம்மென்னா குளத்தை புனர்நிர்மாணித்தல்

ஹம்பாந்தோட்ட மாவட்ட செயலகத்தினால் 2010 ஆம் ஆண்டில் "தேசிய சவிய" கிராம எழுச்சி நிகழ்ச்திட்டத்தின் கீழ் ரூபா 8,687,630 பெறுமதியான 05 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அவை 05 கட்டங்களின் கீழ் பதிவு செய்த 05 சங்கங்களுடன் ரூபா 8,517,392 பெறுமதியான 05 உடன்படிக்கைகள் 2010 ஒக்டோபர் 21 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தன. 2010 திசெம்பர் 03 ஆந் திகதியிலிருந்து 2011 மார்ச் 01 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 5,896,390 தொகை அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களில் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது ஒரே குளக்கட்டிற்காக சமமான விடயங்களையும் சமமான அளவுகளையும் கொண்ட மதிப்பீட்டின் மூன்று பகுதிகளாக கவனத்தில் கொள்வதற்கு அதிகாரசபையின் பொறியியலாளர் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் முதலாவது கட்டத்தின் மதிப்பீடும் அளவீட்டுப் பத்திரத்தின் பிரதியும் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2008 ஏப்ரல் 29 ஆந் திகதிய சுற்றுநிருபம்/கமநெகும/03/2008 ஆம் இலக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சுற்றுநிருபத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கணியப்பட்டியல் (பீஓகியூ) முறைமைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காததுடன் வேலையின் ஒவ்வொரு விடயமும் பகுதிபகுதியாக்கி ஒப்பந்தகார சங்கங்களிற்கு ஒப்படைக்கும் நோக்குடன் மதிப்பீடு நோக்கத்துடன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) வேலையின் முதலாவது, இரண்டாவது மற்றும் நான்காவது கட்டங்களில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தகார சங்கங்களின் உத்தியோகத்தர்களின் 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய வெளிப்பாட்டின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தும் வேலை பூர்த்திசெய்யப்பட்டது தங்களால் அல்ல என்பதனால் ஒவ்வொரு வேலையையும் பூர்த்தி செய்த இடங்களை தங்களால் காட்டமுடியாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2013 ஏப்ரல் 02 ஆந் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கூற்றிலும் ஒவ்வொரு சங்கமும் வேலையைப் பூர்த்தி செய்த இடங்களையும் அளவைகளையும் காட்டமுடியாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அளவீடுகளைப் பெற்றுக்கொண்ட வெளிக்களப் புத்தகங்களும் சமர்ப்பிக்கப்பட முடியாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்

காரணமாக கொடுப்பனவு செய்வதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அளவீடுகள் சரியானவை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) செயற்திட்டத்தின் குளக்கட்டின் நீளம் 420 மீற்றர்கள் என 2013 ஏப்ரல் 02 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட நீளம் 520 மீற்றர், 518 மீற்றர் 1560 மீற்றர்களாகக் கணிப்பிடப்பட்டு 5 கட்டங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 806,042 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) குளக்கட்டிற்காக வழங்கப்பட்ட 4336 கன மீற்றர் மண்ணுக்காக ரூபா 2,065,706 செலுத்தப்பட்டிருந்தும் அதன் மண் குறித்த நியமங்களைக் கொண்டவையா என்பது தொடர்பாக ஆய்வுகூட சான்றிதழ் காணப்படவில்லை. குளக்கட்டின் பாதுகாப்பிற்காக (Pitching of Dam Embankment) விடயத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட வேண்டிய 6x9 அங்குல அளவான கருங்கல்லுக்குப் பதிலாக 1 ½ அடி அளவான குறித்த நியமத்திற்கு அப்பாற்பட்ட கருங்கற்கள் ஈடுபடுத்தப்பட்டு அதற்காக ரூபா 2,394,503 செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) குளக்கட்டு மற்றும் நீர்வழிந்தோடி என்பன 4 இடங்களில் வெடித்துள்ளதனால் நீர் கசிந்துகொண்டு காணப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் கீழ் 610 ஏக்கர்களில் புதிதாகப் பயிர் செய்வதற்கும் லுனுகம்வெஹர நீர்த்தேக்கத்திலிருந்து கால்வாய் ஒன்றினை வெட்டி மேலும் 5 குளங்களுக்கு நீர் வழங்குவதற்கும் இலக்கிடப்பட்டிருந்தும் அக்குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிகாரசபை செலவு செய்த ரூபா 5,896,390 தொகை தொடர்பாக உரிய நலன்கள் கிடைத்திருக்கவில்லை.

### 4.4 பதவியணி நிர்வாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 05 | 04 | 01 | - |
| இரண்டாம் தரம் | 97 | 96 | 01 | - |
| மூன்றாம் தரம் | 105 | 95 | 10 | - |
| ஆரம்ப தரம் | 80 | 82 | - | 02 |
| மொத்தம் | 287 | 277 | 12 | 02 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலி மாவட்ட பணிப்பாளர் அலுவலகத்தின் 03 வாகனங்களுக்காக மூன்று சாரதிகளும் ஒரு சாரதி உதவியாளர் மாத்திரமும் தேவையான போதிலும் அந்த அளவுக்கு மிகையாக 09 சாரதிகளும் இரண்டு சாரதி உதவியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) சாரதிகளும் சாரதி உதவியாளர்களும் ஆண்டின் போது சேவையில் ஈடுபட்டுள்ள முழு நாட்களின் எண்ணிக்கை 304 (சாரதி உதவியாளர்கள் 98 பேர் வேறு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்) ஆக இருந்ததுடன் சாரதி/ சாரதி உதவியாளர்களில் இரண்டு பேர் சேவையில் ஈடுபட்டிருக்காததுடன் ஒரு நபர் 2 நாட்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தார்.

**4.5 ஊழியர் பணிக்கொடைக்கான நிதி ஏற்பாட்டிற்காக ஒரு நிதியத்தினை உருவாக்குதல்**

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான நிதி ஏற்பாடு ரூபா 40,939,560 ஆக இருந்த போதிலும் பணிக்கொடை கொடுப்பனவிற்கான எதிர்கால பொறுப்புக்களைத் தீர்த்துவைப்பதற்காக தனியான ஒரு நிதியத்தை உருவாக்குவதற்காக பேணப்பட்ட வங்கி கணக்குகளின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 993,740 ஆக இருந்தது.

**4.6 வாகனப் பயன்பாடு**

மீளாய்வாண்டின் போது 12 மோட்டார் கார்கள், 02 வேன்கள், 19 கெப் வாகனங்கள், 04 பவுசர்கள், 07 லொறிகள் என்பன அதிகாரசபைக்குச் சொந்தமாகக் காணப்பட்டன. ஆண்டின் போது பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களுக்கான மொத்த கிரயம் முறையே ரூபா 1,071,613 மற்றும் ரூபா 20,385,189 ஆக இருந்ததுடன் ஒரு கிலோ மீற்றருக்கான ஒட்டு மொத்த சராசரிச் செலவுகள் முறையே ரூபா 31.64 மற்றும் ரூபா 60.52 ஆக இருந்தன. காலி மாவட்ட அலுவலகத்தில் காணப்பட்ட 3 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது செயற்பாட்டில் ஈடுபட்ட துாரங்கள் 9451 கிலோ மீற்றர்களாக இருந்ததுடன் அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 12 சாரதிகள் மற்றும் சாரதி உதவியாளர்களுக்காக சம்பளங்களும் படிகளுமாக ரூபா 2,853,416 செலுத்தப்பட்டிருந்தது. வாகன மேற்பார்வை மற்றும் எரிபொருளுக்காக ரூபா 122,385 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க செலவு செய்யப்பட்ட பணத்தையும் ஓடிய கிலோ மீற்றர் எண்ணிக்கையும் ஒட்டுமொத்த செலவுகளையும் கருத்தில் கொள்ளும் போது ஒரு கிலோ மீற்றர் ஓடுவதற்காக ரூபா 315 செலவு செய்யப்பட்டிருந்தது.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2012 இலிருந்து 2015 வரையான காலப்பகுதிக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும நிகழ்த்திட்டத்தின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டிற்கான தொடர்ச்சியான செயற்திட்டங்களுக்கு பணம் செலுத்துதல் மாத்திரம் 2012 ஆம் ஆண்டின் போது இடம் பெற்றிருந்தது.

அதற்கிணங்க அதிகாரசபையின் பிரதான குறிக்கோள்களில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

--------------------------------------

2012 ஆம் ஆண்டிற்காக ஒரு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் அத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட புதிய செயற்திட்டம் அமைச்சிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் தொடர் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

------------------------------

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை முழுமையாக உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

**5.4 கொள்வனவுத் திட்டம்**

-----------------------------

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் அத்திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

----------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீடு பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் கூட்டிணைந்த திட்டத்திற்கும் செயல்நடடிக்கைத் திட்டத்திற்கும் இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-------------------------------------------

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டப்பாட்டு அம்சங்கள் தொட்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) சொத்துக் கட்டுப்பாடு

(இ) ஒப்பந்த நிர்வாகம்

எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*Nr/Sd*

**தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை**

**2012 டிசம்பர் 31இல் நிதி நிலைமை பற்றிய அறிக்கை**

| | | 2012 ஆம் ஆண்டு | | 2011ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | குறிப்பு | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், இயந்திரங்கள், உபகரணங்கள் (W.D.V) | 1 | 145,659,902 | | 145,819,537 | |
| முதலீடுகள் நீண்டகால | 2 | 43,097,520 | | 43,097,520 | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | | - | 188,757,422 | - | 188,917,057 |
| **நடைமுறைச் சொத்துக்கள** | | | | | |
| தொகைகள் | 3 | 434,717 | | 660,385 | |
| வர்த்தக, ஏனைய பெறுகைகள் | 4 | 28,414,102 | | 34,366,341 | |
| முற்கொடுப்பனவுகள் | 5 | 848,827 | | 979,842 | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 6 | 5,709,801 | 41,576,826 | 5,570,258 | 41,576,826 |
| **மொத்த சொத்துக்கள்** | | | 224,164,869 | | 230,493,883 |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| கொடுப்பனவுகள் | 7 | 13,390,524 | | 15,081,083 | |
| திரட்டிய செலவினம் | 8 | 18,285,029 | | 39,891,644 | |
| குறுகியகாலக் கடன்கள் (OD) | | - | 31,675,553 | - | 54,972,727 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| கொடுப்பனவுககள் | | - | | - | |
| செலுத்த வேண்டிய கடன்கள் | | - | | - | |
| தாமதித்த வருமானம் | | - | | - | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 40,939,560 | 40,939,560 | 34,808,657 | 34,808,657 |
| மொத்த பொறுப்புக்கள் | | | 72,615,113 | | 89,781,384 |
| மொத்த தேறிய சொத்துக்கள் | | | 151,549,756 | | 140,712,499 |
| தேறிய சொத்துக்கள் பங்குகள் திரட்டிய நிதியம் | EC | 151,549,756 | | 219,419,936 | |
| ஒதுக்கீடுகள் | | - | 151,549,756 | - | 140,712,499 |
| திரட்டிய நட்டம் | EC | | 151,549,756 | | 140,712,499 |

69ஆம் பக்கத்தில் இருந்து 92 பக்கம் வரையிலான கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் நிதித்துறை அறிக்கையில் முக்கிய இடத்தை வகுக்கின்றன.

தற்கான கணக்காய்வு அறிக்கை இலக்கம் 49 ஆம் பக்கத்திலிருந்து 61 வரையான பக்கஙகளில் இருக்கின்றன. அடைப்புக்குறிக்குள் எண்களனின் கழித்தல்களை காணப்படுகின்றன.

இந்நிதி அறிக்கை 1971 இலக்கம் 38 ஆம் நிதிச்சட்டத்தின் தேவைகளுக்கு மற்றும் பொதுவான கணக்கியல் கொள்கைகளுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டவை என உறுதிபடுத்துகின்றேன்.

……………………………………….
பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்)
இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

## 2012 டிசம்பர் 31 திகதியில் முடிவடையும் நிதி செயற்பாடுகளின் அறிக்கை

| | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| **செயற்பாடு** | | | |
| மீள்வரு மானியம் | | 108,955,000 | 107,600,000 |
| ஏளைய வருமானம் | 9 | 5,669,052 | 7,073,581 |
| | | 114,624,052 | 114,673,581 |
| **செயற்பாடு செலவினம்** | | | |
| ஊழியர் சம்பளங்கள் | 10 | 104,304,782 | 102,982,593 |
| பிரயாணச் செலவு | 11 | 1,654,115 | 2,379,175 |
| விநியோகம் மற்றும் வாடிக்கையாளர் சேவை | 12 | 4,259,365 | 5,348,518 |
| பராமரிப்புச் செலவு | 13 | 7,601,015 | 12,170,101 |
| ஒப்பந்தச் சேவைகள் | 14 | 7,644,321 | 3,778,800 |
| தேய்மானம் | 01 | 10,556,445 | 11,074,248 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 15 | 3,314,372 | 3,346,529 |
| **மொத்த செயற்பாட்டு செலவினங்கள்** | | 139,334,416 | 141,079,964 |
| **காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகனின் மிகை /குறை** | | **(24,710,364)** | **(26,406,383)** |

69ஆம் பக்கத்தில் இருந்து 92 ஆம் பக்கம் வரையிலான கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் நிதித்துறை அறிக்கையில் முக்கிய இடத்தை வகுக்கின்றன.

தற்கான கணக்காய்வு அறிக்கை இலக்கம் 49 ஆம் பக்கத்திலிருந்து 61 வரையான பக்கங்களில் இருக்கின்றன. அடைப்புக்குறிக்குள் எண்களனின் கழித்தல்களை காணப்படுகின்றன.

ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

2012-12-31 இல் முடிவடைந்த ஆண்டில் தேரிய சொத்துக்களின் மாற்றங்கள்

| | திரட்டிய நிதியம் | திரட்டிய மிகை/குறை | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ |
| 2011 (டிசம்பர் 31 இல் நிலுவை) | 176,260,121 | - | 176,260,121 |
| கணக்கியல் கொள்கைகளின் மாற்றங்கள் | - | - | - |
| திருத்தப்பட்ட நிலுவை | 176,260,121 | - | 176,260,121 |
| ஆதனங்கள் மீள் மதிப்பீட்டின் மேலதிகம் | - | - | - |
| முதலிடுகள் மீள் மதிப்பீட்டிக் பற்றாக்குறை | - | - | - |
| நாணய பரிவர்த்தனை வித்தியாசங்கள் | - | - | - |
| நிதி மீளாய்வில் இனங்காண முடியாத தேரிய இலாபமும் நட்டமும் | - | - | - |
| காலப்பகுதிக்கான மேலதிகம்,பற்றாக்குறை | - | (24,710,364) | (24,710,364) |
| 2011 டிசம்பர் 31 இல் நிலுவை | 176,260,121 | (24,710,364) | 151,549,756 |

| திரட்டிய நிதியம் | | அட்டவணை | | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2012-01-01 இல் நிலுவை | | - | 140,712,499 | |
| கூட்டக: 2012.01.01 இல் இடம்பெறும் வேலைகள் | | | 291,648 | |
| 2012-01-01 அபிவிருத்தி செலவினம் | | | 1,991,513,537 | |
| | | | 2,132,517,684 | - |
| திரட்டிய நிதியத்தின் முன்னைய வருட சீராக்கல். | | | (1,118,139) | |
| | | | 2,131,399,545 | |
| 2012 பெற்றுக்கொண்ட நிதி | | - | 54,596,609 | |
| வழமையான திட்டங்கள் | | | 81,537,135 | |
| விசேட திட்டங்கள் | | - | 2,267,533,289 | 2,267,533,289 |
| 2012-12-31 இல் திரட்டிய அபிவிருத்தி செலவினம் | | | | |
| | | (அட்டவனை 19) | | (2,091,273,168) |
| | - | - | | - |
| 2012.12.31 இல் திரட்டிய நிதியம். (செயற்பாட்டு வருமானத்திற்கு முன்) | | | | 176,260,121 |

69ஆம் பக்கத்தில் இருந்து 92 ஆம் பக்கம் வரையிலான கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் நிதித்துறை அறிக்கையில் முக்கிய இடத்தை வகுக்கின்றன.

தற்கான கணக்காய்வு அறிக்கை இலக்கம் 49 ஆம் பக்கத்திலிருந்து 61 வரையான பக்கஙகளில் இருக்கின்றன. அடைப்புக்குறிக்குள் எண்களனின் கழித்தல்களை காணப்படுகின்றன.

ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை

2012 டிசம்பர் 31 இல் திரட்டிய காசுப்பாய்ச்சல் அறிக்கை

| | 2012 | 2011 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல் | ரூ. | ரூ. |
| செயற்பாட்டு நடவடிக்கைகளின் மேலதிகம்/பற்றாக்குறை | (24,710,364) | (26,406,382) |
| காசற்ற நடவடிக்கைகள் | | |
| தேய்மானம் | 10,556,445 | 11,074,248 |
| பணிக்கொடைக்கா ஏற்பாடு | 6,637,883 | 12,362,617 |
| முன்னைய வருட சீராக்கல் - இடம்பெறும் வேலை | 291,648 | 17,189,233 |
| - திரட்டிய நிதியம் | (1,118,139) | (1,726,239) |
| திரட்டிய அபிவிருத்தி செலவினம் | 146,052 | (1,093,516) |
| - திரட்டிய தேய்மானம் | - | (49,590) |
| கொடுப்பனவுகள் அதிகரிப்பு/குறைவு | (23,297,174) | 3,017,431 |
| | - | - |
| ஆதனங்கள்,உபகரணங்கள் விற்பனையின் லாபம் நட்டம் | 356,683 | 2,856,152 |
| ஏனைய நடைமுறைச் சொத்தக்களின் அதிகரிப்பு,குறைவு | - | - |
| பெறுகைகளின் அதிகரிப்பு | 5,952,239 | 2,856,152 |
| வேறு அசாதாரண பொருட்கள் | - | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளின் காசப்பாய்ச்சல் | (25,184,726) | 18,137,744 |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல் | | |
| மூலதன செலவினம் | (99,905,683) | (235,480,884) |
| தலைமை அலுவலக கட்டட நிர்மாணம் | - | (6,483,097) |
| நிலையான சொத்தக்கள் புனரமைப்பு-காணி கணக்குகளில்) | (7,461,777) | (255,126) |
| நிலையான சொத்துக்கள் (வாகனங்கள்) | - | (122,800) |
| இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவு | (2,935,032) | (507,375) |
| முதலீடகள் | - | 815,663 |
| மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன பரிமாற்றம் | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து தேரிய காசுப் பாய்ச்சல் | (110,302,492) | (242,033,619) |
| நிதி நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல் | | |
| வழமையான திட்டங்களுக்கான மூலதனம் | 54,596,609 | 119,102,000 |
| விசேட திட்டங்களுக்கான மூலதனம் | 81,537,135 | 50,000,000 |
| இடம் பெறும வேலைகள் | - | (291,648) |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (506,980) | (822,466) |
| | 135,626,764 | 167,987,886 |
| நிதியும் அதற்கு சமமானவற்றின் தேரிய மிகை/குறை | 139,546 | (55,907,989) |
| ஆரம்ப நிதி மற்றும் நிதிக்கு சமமானவற்றின் நிலுவை | 5,570,258 | 61,478,247 |
| காலயிறுதியல் இறுதியில் நிதியும˙சமமானவையும் (குறிப்பு) | 5,709,804 | 5,570,258 |

69ஆம் பக்கத்தில் இருந்து 92 ஆம் பக்கம் வரையிலான கணக்கியல் கொள்கைகளும், குறிப்புக்களும் நிதித்துறை அறிக்கையில் முக்கிய இடத்தை வகுக்கின்றன.

தற்கான கணக்காய்வு அறிக்கை இலக்கம் 49 ஆம் பக்கத்திலிருந்து 61 வரையான பக்கங்களில் இருக்கின்றன. அடைப்புக்குறிக்குள் எண்களனின் கழித்தல்களை காணப்படுகின்றன.

# கணக்காய்வுக் கொள்கைகளும் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களும் - 2012

## 01. அறிக்கையிடும் பிரிவு

இந்நிதி கூற்றுக்கள் 1996 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டட அரச நிறுவனம் ஒன்றான இலங்கை தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்த்தாகும். இச்சபையின் தலைமை அலுவலகம் மாத்தறை, வல்கம வடக்கு, மாத்தொட்டகம, இல.15 என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

### 1.2 நிறுவனத் தகவல்கள்

#### 1.2.1 தொலைநோக்கு

'துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்திற்கு நுழைவாயிலாக அமையும் அதேசமயத்தில், கவர்ச்சிகரமான, சவால் விடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை, இளைஞர்களுக்கு உருவாக்கி, புவியியல் ரீதியில், நிலைபேறான கலாசார அடிப்படையில், அதிசயிக்கத்தக்க சூழலை உள்ளடக்கிய, பொருளாதார சுபீட்சம் கொண்ட, தென் பிராந்தியத்தை உருவாக்குவதே எமது தொலைநோக்காகும்.'

#### 1.2.2 இலக்கு

தனியார்துறையினரதும், உப அமைப்புக்களினதும் ஒத்துழைப்புடன், பிராந்திய மக்களுக்கு அவசியமான தேவைகள், பிராந்தியத்தின் மூலவளங்கள் என்பனவற்றை கடும் பரிசோதனையின் அடிப்படையில் இனம் காண்பதன் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரத்தையும், சவாலாக அமைந்துள்ள சந்தர்ப்பங்களையும் வழங்கும் சூழலுக்கு உட்பட்ட வகையில் இலக்குத் தீர்மானிக்கப்பட்ட தனி நபர் வருமானத்தை அடைவதும், பிராந்தியத்தின் மொத்த பொருளாதார உற்பத்தியின் துரித வளர்ச்சிக்குப் பங்களிப்பை வழங்குவதுமே எமது இலக்காகும்.

#### 1.2.3 குறித்துரைக்கப்பட்ட பிரதேசங்கள்

1996 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 3(1)ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் 2001.12.20 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானியின் 01 ஆம் பகுதியின் முதலாவது உப பிரிவுக்கு அமைய அதிகார சபையின் குறித்துரைக்கப்பட்ட பிரதேசம் என்பது காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகல மாவட்டங்களையும், இரத்தினபுரி மாவட்டத்தின் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளான கொலன்ன மற்றும் எம்பிலிப்பிட்டிய என்பனவற்றையும் உள்ளடக்கியதாகும்.

#### 1.2.4 ஊழியர்களின் விபரங்கள்

| | |
|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 03 |
| மூன்றாம் நிலை | 89 |
| இரண்டாம் நிலை | 91 |
| ஆரம்பக்கட்டம் | 78 |
| மொத்தம் | 261 |

## 02. கணக்கியல் கொள்கைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் அடிப்படை

ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கியல் தரங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு, கால எல்லைக்கு உட்பட்ட செலவின அடிப்படையில் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. வருமானமும், செலவினங்களும் அவற்றுக்குப் பொருத்தமான காலப்பகுதிக்கான நிதி அறிக்கையில் திரட்டிய அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் தெரிவிக்கப்பட்ட குறிப்புக்கள் மூலம் கொள்கைகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

### 2.2 தொடர்ந்து நிலைதிருத்தல் பற்றிய கோட்பாட்டின் பொருத்தம்

இவ்வதிகார சபை மற்றும் வேறு ஐந்து நிறுவனங்கள் உள்ளடக்கி ‘திவிநெகும திணைக்களம்’ என்ற பெயரில், புதியதொரு திணைக்களத்தை அமைப்பதற்கு அரசு தீர்மாணம் செய்துள்ளதோடு, அதற்கான சட்டம் 2013.01.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.(2013 இலக்கம் 1 க் கொண்ட திவி நெகும திணைக்களச் சட்டம் என்ற பெயரில் 2013.01.08 ஆம் திகதியில் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும். இக்காரணத்தை கருத்திற்கொண்டு இவ்வதிகாரச் சபையின் செயற்பாடு 2013.01.08 ஆம் திகதியிலிருந்து அற்றுப்போகும். தொடர்ந்து நிலைத்திருக்கும் கருத்து இவ்வதிகாரச் சபைக்கு பொருத்தமற்றதாக கருதி ஸ்ரீ லங்கா கணக்கியல் தர இலக்கம் 01 ல் வரும், ஆலோசனைகள் மற்றும் வழி காட்டலுக்கு அமைவாக, 1012 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரித்திருக்கின்றன.

### 2.3 பதிவு செய்யும் கால எல்லை

நிதிக்கூற்றுக்களுக்கான பதிவு செய்யும் காலம், 2012 டிசம்பர் 31 இல் முயவடையும் வருடமாகும்

.

### 2.4 கணக்குக்கள் அங்கீகரித்தல்

2013.02.26 ஆம் திகதி இவ்வதிகார சபையின் பணிப்பாளர் சபையால் இவவிறுதி கணக்கை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது

## 03. சொத்துக்கள் மற்றும் சொத்துக்களை மதிப்பிடும் முறை

மேல் 2.2 இலக்கமுடைய அத்தியாயங்களில் குறிப்பிட்ட முக்கிய நிகழிவுகளை கருத்திற்கொண்டு மற்றும் பொதுவான கணக்கியல் கொள்கைகளுக்கு அமைவாக அதிகார சபையின் அனைத்து சொத்துக்கள் நடமாடும் சொத்துக்களாக நிதிக்சூகூற்றுகளில் காட்டப்பட்டிருக்கின்றன.

**(அ) நடைமுறை சொத்துக்கள்.**

நடைமுறைச் சொத்துக்களாக ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள உடைமைகளில் கையிருப்பு பண நிலவைகள், வங்கி கணக்குகளின் நிலுவைகள், வங்கி கையிருப்பு மற்றும அதிகார சபையின் பொது நடிக்கைகளுக்கு உற்பட்ட காலங்களில் அல்லது தெரியப்படுத்தும் திகதி தொடங்கி ஒரு வருட காலத்தில் பணமாக கருதப்படும் பொது நடப்புச் சொத்துக்களும் அடங்கும்.

**(ஆ) கட்டிடம் இயந்திரம் மற்றும் உபகரணங்கள்**

கட்டிட இயந்திர மற்றும் உபகரண வகைகள், செலவிக்கு நேரிட்ட எண்ணிக்கையின் பெறுமதிக்கு அதன் பெறுமதியின் கழிவு காட்டப்பட்டுள்ளது. செலவுக்குப் சொத்துக்களை பெற்றுக் கொள்வதற்கான நேரடியாக இணைக்கப்பட்ட செலவுகள் உற்படுத்தப் பட்டுள்ள. நிர்மானச் செலவிற்கு பொருட் செலவு, ஊழியர்களுக்கான செலவு, மற்றும் அதன் உடைமைகளின் எதிர்ப்பார்க்கக்கூடிய பயன் விளைவுகளினால் பெற்றுக்கொள்ளக் கூடிய நேரடியான இனைக்கூடிப் பேறு செலவுகள், மற்றும் வெவ்வேறான உடைமை வகைகளை அகற்றுதல் மற்றும் வேறுபடுத்துதல்கள், அவ்வகைக்களுக்கான இடங்களில் நிர்மானிக்கும் வேறு செலவுகள் இதற்கு உள்ளடங்கும். காணி தேவைக்கு ஏற்றபடி அவற்றின் செலவுகள் அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட செய்யப்பட்ட பெறுமானத்திற்கு இணைய மதிபீடு காட்டப்பட்டுள்ளது.

காணி இயந்திரம் மற்றும் உபகரண வகையின் பகுதிகளாக வேறுபட்ட காலங்கள் இருப்பின் அவற்றை காணி இயந்திர மற்றும் உபகரண வகைகளின் வேறுபட்ட வகையாக கணக்கீட செய்ப்பட்டுள்ளது. காணி, இயந்திர மற்றும ் உபகரணங்கள் வகைகளை வேறு படுத்தும்போது ஏற்படும் இலாப மற்றும நட்டங்கள் அவ்வேறுபடுத்தலின் வருமானம், காணி இயந்திர மற்றும் உபகரண வகையின் தற்போதைய பெறுமானத்துடன் ஒப்பிட்டு நிர்ணயிக்கப்படுவதோடு, அவற்றின் இலாபம் மற்றும் நட்டம் முதலீடு அபிவிருத்தி வருமானமமாக கணக்கீட்டின் நிகர பெறுமதி என அறிந்துக் கொள்ளப் பட்டுள்ளது.

(ஆ) மிகைப்படியான நிகழ்வுக்குறிய செலவுகள்

உடைமை, இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பகுதியை தள்ளிக் கழித்தளின் போது அப்பகுதி அதற்குற்பட்ட எதிர்கால பொருளாதார பயன் விளைவுகள் அதிகார சபைக்கு கிடைக்கும் பட்சத்தில், மற்றும் அபிவிருத்தியின் செவவுகள் நம்பிக்கையுடன் பெறுமானயிட முடியுமான பட்சத்தில் அத்தள்ளிக் கழித்தலின் பெறுமானத்திற்கு காட்டப்பட்டுள்ளது. அவ்வாறான தள்ளிக் கழித்த வகைகளின் தற்காலப் பெறுமதி கண்டு, படிக்கப்படுவதில்லை. உடைமானம், இலத்திரன் மற்றும் உபகரணங்களுக்கான அன்றாட சேவைகளுக்கான செலவினம் அவைக்கான காலத்திற்கேட்ப வருமானம் மற்றும் செலவு பற்றிய அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

பெறுமானத் தேய்வு

ஒவ்வோர் பிரிவுகளுக்கான உடைமைகளின் பெறுமானத்தேய்வு பற்றிய முழு நிறுவனத்தின் கொள்கையாவது, கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திற்கான முழு வருடத்திற்கும் தேய்வு மற்றம் அகற்றும் வருடத்திற்கான கழிவு நடைமுறைப் படுத்தாமையாகும். உடைமைகளின் செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் நூற்று வீதங்களின் படி அவற்றிற்கான உடைமைகளின் பெறுமானத் தேய்வு கணக்கீட செய்பட்டுள்ளது.

| | |
|---|---|
| - கட்டடங்கள | 5% |
| - மரத்தளபாடங்கள் மற்றும் வேறு உபகரணங்கள். | 10% |
| - மின்சார உபகரணங்கள் | 20% |
| - மோட்டார் வாகனங்கள் | 15% |
| - பயிற்சிக்கான உபகரணங்கள் | 25% |
| - பெயர்ப பலகை | 10% |

**04. வணிக மற்றும் வேறு கையிருப்புக்கள்**

பலவிதப்பட்ட பாவனைப் பொருட்கள் மற்றும பலவித கொடுப்பனவுகளின் கையிருப்பு இவற்றில் அடங்கும். எனினும், இக் கையிருப்புக்களில் அதிகபடியானவை, அலுவலக கடதாசி வகைகள் மற்றும் குறைந்த பெறுமானமுள்ள பொருட் பட்டியல்களில் கையிருப்புகளுமாகும். இக்கையிருப்புக்கள், செலவிற்கு அல்லது நிகர பெறுமதி என்று பெறுமதிகளின் நிகர பெருமானத்திற்கு பெருமானம் இடப்பட்டுள்ளது. பொதுவான தொழிலா் நடவடிக்கைகளில் நிகரான விற்பனை விலையின் குறிப்பிட்டகையிருப்பு மேலும் பூர்த்திச் செய்வதற்கான மதிப்பீடு செலவு மற்றும் அவற்றை விற்பனை செய்வதற்கான செலவுகளை குறைத்த பின் நிகர பெறுமதி மதிப்பீட செய்யப்பட்டுள்ளது.

விலை யாவும் முதல் வருகை முதல் செல்லுதல் என்ற அடிபபடைக்க அமைய குறிப்பிட்ட கையிருப்புக்களின் செலவுகள் கணக்கீடு செய்யப்படுவதோடு அச் செலவுக்கு உரித்தான கையிருப்பினை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு மற்றும் குறிப்பிட்ட கையிருப்பு உள்ள இடத்திற்கு கொண்டு வருவதற்கான மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் இவற்றில் அடங்கும்.

**05. கிடைக்க வேண்டிய வருமானம்**

கிடைக்க வேண்டிய வரவுகள், அவை நிகழ்வுப் பெறுமதியாகும் என எதிர்ப்பார்க்கப்படும் பெறுமானங்களின், கிடைக்கப்பெறாத கடன்கள், மற்றும் கிடைக்குமென சந்தேகிக்கப்படும் பெறுமானங்கள் கழிக்கப்பட்டதன் பின் கிடைக்கும் நிகர பெறுமானங்கள் புத்தகங்களில் உள்ளடக்கி சமா்ப்பிக்கப் பட்டுள்ளது.

**06. ஊழியா் பயன்பாடு**

**01. நிரந்தர (மாறாத) பங்களிப்புத் திட்டம்.**

மூலதனம்

1980 ஆம் ஆண்டின் 46 ஆவது இலக்க ஊழியா் நம்பிக்கை மூலதன சட்டத்திற்கு அமைவாகவும், 1958 ஆம் வருட 15 ஆவது இலக்க ஊழியா் பங்களிப்பு மூலதன சட்டத்திற்கு மற்றும் இதற்கான திருத்தங்களுக்கு அமைய ஸ்ரீ லங்கா தென் பிராந்திய அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியா் பங்களிப்பு நிதியத்திற்கு 12% ஆகவும், ஊழீயா் நம்பிக்கை நிதியத்திற்கு 3% ஆகவும் வழங்கப்பட்டுள்ளது.

**02. ஊழியா் பயன் பெறும் திட்டங்கள்.**

ஓய்வூதிய நன்மதிப்புத் தொகை

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியதிகளுக்கு அமைய, ஒரு விசேட வேவைக்காலத்தினை முழுமையாக பூர்த்திச் செய்த ஊழியா்களுக்காக கொடுக்க வேண்டிய ஓய்வூதிய நன்மதிப்புப் பணத்தொகை பதிப்பீட செய்யப்பட்டு இந்நிதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், 1983 ஆம் வருட 12 ஆவது இலக்க நன்மதிப்புப் பணத்தொகை வழங்கல் மற்றும் சட்ட விதி முறைகளுக்கு அமைய ஊழியா் ஒருவா் தொடா்ச்சியாக ஐந்து வருட கால சேவையைப் பூர்த்திச் செய்ததன் பின்னா் மட்டுமே குறிப்பிட்ட கொடுப்பனவுகளின் பெறுமானங்கள் அமைகின்றன. அப்பெறுமானத்திற்கு சமமான மூலதனம் எதுவும் வெளிவாரியாக அமைக்கப்பட்டதன்றி பற்றிய பெறுமானம் இடல் அல்லது நடைமுறைப் படுத்தலோ இடம்பெறவில்லை.

அதிகார சபைக்கு உற்பட்ட 261 ஊழியா்கள் ஓய்வூதிய நன்மதிப்புப் பணத்திற்கான தகுதியினை பெற்றுள்ளனா். 2012 ஆம் வருடத்திற்கான ஓய்வூதிய நன்மதிப்பு மூலதன பகுப்பு 6710883.50 ரூபாவதோடு 2012.12.31 திகதிற்கு ஓய்வூதிய நன்மதிப்பீட்ட மூலதன பகுப்புத் தொகையிலுள்ள நிலுவை ரூபா. 40,939,560.00 ஆகும்.

**07. மூலதன பொறுப்புடைமை மற்றும் விபரீதமான வரவுகள்**

